Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

தமிழ் Mirror www.tamilmirror.lk

MONDAY, FEBRUARY 12, 2024

திங்கட்கிழமை பெப்ரவரி 12, 2024 | ஒளி: 09 கதிர்: 191 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ FREE

# “நான் தயார்”



இந்த ஆண்டு நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு தான் எதிர்பார்ப்பதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

இந்திய செய்தி சேனலான WION க்கு வழங்கிய பிரத்தியேக நேர்காணலின் போதே ஜனாதிபதி இதனைத் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியப் பெருங்கடல் பகுதியில் சீனாவின் பிரசன்னம் அதிகரித்துள்ளமை குறித்து கவலை தெரிவித்த ஜனாதிபதி விக்ரமசிங்க, “ இந்தியாவின் பாதுகாப்பிற்கு குந்தகம் விளைவிக்கும் எதையும் நாடு அனுமதிக்காது” என்றும் குறிப்பிட்டார். தொடர்ச்சி P2



## முட்டையின் விலை எகிறுகிறது

இவ்வருடம் இறக்குமதி செய்யப்பட்ட 7 மில்லியன் முட்டைகள் எதிர்வரும் வாரத்தில் லங்கா சதொசவுக்கு விநியோகிக்கப்படவுள்ளதாக அரச வர்த்தக கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

பண்டிகை காலம் அண்மித்து வருவதனால் சந்தையில், முட்டைகளின் விலையை அதிகரிப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்நிலையிலேயே, சதொசவுக்கு விநியோகிக்கப்பட உள்ளது.

தொடர்ச்சி P2

## மைத்திரி ஆதரவு



நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை நீக்கும் பிரேரணைக்கு தமது கட்சி ஆதரவளிக்கும் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## கழுத்தில் கயிறு இறுகி சிறுவன் மரணம்

ஆ.ரமேஸ்



நுவரெலியா பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மாகஸ்தோட்ட பகுதியில் கழுத்தில் கயிறு இறுகியதில் சிவகுமார் டிலக்சன் (12 வயது) சிறுவன் ஞாயிற்றுக்கிழமை (11) உயிரிழந்துள்ளார்.

தொடர்ச்சி P2

## ஆஸி. பெண்ணின் அந்தரங்கத்தை தொட்டவருக்கு சிக்கல்

செ.திவாகரன்

மசாஜ் சேவையை பெற்றுக்கொள்ள சென்ற அவுஸ்திரேலிய பெண்ணை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்க முயற்சித்ததாக கூறப்படும் நபர் தொடர்பில், அவுஸ்திரேலியா பெண், முறைப்பாடு செய்துள்ளார் என நுவரெலியா பொலிஸார் தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2

## “வெட்கம் இல்லை”



ராஜபக்‌ஷர்கள், யுத்த வெற்றியை முதன்மையாகக் கொண்டு நாட்டின் உரிமையை எழுதி எடுத்தது போல, வெட்கமின்றி ஐ.தே.கவின் தலைமைத்துவத்தை எழுதி எடுத்துக்கொண்ட ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிக்கத் தயாராகி வருவதாக அவருக்கு நெருங்கிய பத்திரிகைகள் ஊடாக பிரசாரங்களை முன்னெடுத்து வருகிறார் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச குற்றஞ்சாட்டினார்.

தொடர்ச்சி P2

## “அவசரம் இல்லை”



ஜனாதிபதி வேட்பாளரை பல அரசியல் கட்சிகள் ஏற்கெனவே அறிவித்துள்ள போதிலும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தனது வேட்பாளரை தேர்தல் நெருங்கும் போது பெயரிட தீர்மானித்துள்ளது என கட்சியின் செயலாளர் சட்டத்தரணி சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## “மக்களுக்கு புரிந்து விட்டது”



கடந்த பொதுத் தேர்தலில் நாட்டு மக்கள் ஐக்கிய தேசியக் கட்சியை நிராகரித்த போதிலும், ஐக்கிய தேசியக் கட்சியால் மாத்திரமே நாட்டைக் கட்டியெழுப்ப முடியும் என்பதை மக்கள் புரிந்து கொண்டுள்ளனர் என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜயவர்தன தெரிவித்துள்ளார். தொடர்ச்சி P2

## “ரூ.2,000 கோடி வேண்டும்”


ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தலை நடத்துவதற்கு 2,000 கோடி ரூபாய் தேவைப்படுமென தேர்தல்கள் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் சமன்சிறி ரத்னாயக்க தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## ‘அசேல’வுக்கு நஞ்சூட்ட முயன்ற நபர் கைது

கதிர்காமம் ஸ்ரீ அபிநவராம விகாரையின் பராமரிப்பில் இருந்த ‘அசேல’ என்ற யானைக்கு விஷம் வைத்து கொலை செய்வதற்கு முயன்றார் எனக் கூறப்படும் பிரதான சந்தேகநபர் சுமார் 6 மாதங்களாக தலைமறைவாக இருந்த நிலையில், கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

தொடர்ச்சி P2



## நாமல் எம்.பி விசேட சந்திப்பு



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்‌ஷ இந்தியாவின் உத்தர பிரதேசத்திற்கு இரண்டு நாள் தனிப்பட்ட விஜயத்தை மேற்கொண்டுள்ளார். அவர்,

தொடர்ச்சி P2

## “225 பேருக்கும் இடமில்லை”



பாராளுமன்றத்தில் உள்ள 225 உறுப்பினர்களில் எவரையும் இணைத்துக் கொண்டு அரசியல் கூட்டணி அமைப்பதில்லை என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

ஹரிஹரன் இசை நிகழ்ச்சியில் குழப்பம்

## அறுவர் கைது: மூவருக்கு காயம்

நிதர்ஷன் வினோத்



யாழ்ப்பாணத்தில் பெரும் குழப்பத்துடன் நடைபெற்ற ஹரிஹரனின் இசை நிகழ்ச்சியில் குழப்பம் விளைவித்தனர் என்ற குற்றச்சாட்டின் பேரில், அறுவர் கைது செய்யப்பட்டனர். காயமடைந்த மூன்று பேர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சி P2

## “விரும்பத்தகாத சம்பவங்கள் வருத்தமளிக்கின்றன”



தென்னிந்தியப் பாடகர் ஹரிஹரன் தலைமையில் இசைக் கலைஞர்கள் கலந்துகொண்ட இசை நிகழ்ச்சியில் இடம்பெற்ற விரும்பத்தகாத சம்பவங்கள் வருத்தமளிப்பதாக தெரிவித்துள்ள கடற்றொழில் அமைச்சர் அமைச்சர் டகள்ஸ் தேவானந்தா, இவ்வாறான சம்பவங்கள் எமது மக்களை தொடர்ந்தும் துன்பத்தில் அமுழ்த்தி குளிர்காய விரும்பும் சுயநலத் தரப்புக்களுக்கு வாய்ப்பாக மாறிவிடும் எனவும் வருத்தம் தெரிவித்துள்ளார்.

யாழ். முற்றவெளியில் வெள்ளிக் கிழமை(09) இடம்பெற்ற தென்னிந்திய திரைப் பிரலங்கள் கலந்து கொண்ட நிகழ்ச்சியில் ஏற்பட்ட குழப்பங்கள் தொடர்பாக ஊடகவியலாளர் ஒருவரினால் கேட்கப்பட்ட கேள்விக்கு பதில் அளிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பாக மேலும் தெரிவிக்கையில், “'இவ்வாறான சம்பவங்கள் எமது பிரதேசங்களில் இடம்பெறுவது வேதனையளிக்கின்றது.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# “நான் தயார்”




WION நிருபர்: இந்த ஆண்டு தேர்தல் நடக்கிறது. நீங்கள் எவ்வளவு நம்பிக்கையுடன் இருக்கிறீர்கள் ?

ஜனாதிபதி ரணில்: நான் மீண்டும் வருவதற்கு நான் போட்டியிட வேண்டும். பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதை முதல் கடமையாகக் கொண்டுள்ளேன். திவால் நிலையிலிருந்து மீள்வதில் கவனம் செலுத்துவதே இலக்காகும். நான் மீண்டும் ஜனாதிபதி பதவிக்காகப் போட்டியிட எதிர்பார்த்துள்ளேன்.

WION நிருபர்: நீங்கள் ஒரு நல்ல வேலையைச் செய்து விட்டீர்கள் என்று நினைக்கிறீர்களா? அதாவது, இலங்கை மீண்டும் இயல்பு நிலைக்குத் திரும்பியதன் அடிப்படையில் உங்கள் பதவிக்காலத்தில் பொருளாதாரம் பற்றிய உங்கள் பார்வை என்ன?

ஜனாதிபதி ரணில்: சரி, நான் மிகவும் திருப்தியடைகிறேன், எங்களால் இதைச் செய்ய முடியும் என்று நான் உணர்கிறேன் என தெரிவித்துள்ளார்.



# முட்டையின் விலை எகிறுகிறது

இதற்கமைய, தற்போது சதொச சிறப்பங்காடிகளிலும், சில்லறை வர்த்தக நிலையங்களிலும் முட்டைகளை பெற்றுக்கொள்ள முடிவதில்லை என நுகர்வோர் குற்றம் சுமத்தி வருகின்றனர்.

அதேநேரம், திங்கட்கிழமை (12) முதல் உள்ளூர் முட்டை ஒன்றின் விலை, 65 ரூபாவாக அதிகரிக்கலாம் என அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

# மைத்திரி...

இது தொடர்பான பிரேரணையை கொண்டு வருவதற்கான ஆயத்தம் இடம்பெற்றுள்ளதாக தமக்கு தகவல் கிடைத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஏற்பாடு செய்திருந்த 'நாம் சுதந்திரத்திற்காக' என்ற மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

# “வெட்கம் இல்லை”

ஜனாதிபதி முறைமை இல்லாதொழிக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே நாமும் இருக்கிறோம். என்றாலும், நாட்டு மக்களின் வாக்குரிமை பாதுகாக்கப்பட்டே அதனை இல்லாதொழிக்க வேண்டும். பொதுத் தேர்தலில் மக்கள் வாக்களிக்கும் உரிமை பாதுகாக்கப்பட்டே நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை ஒழிக்க வேண்டும்.

இதுவரை போதிய காலம் காணப்பட்டது. வேண்டிய வாக்குகள் காணப்பட்டண. ஜனாதிபதி ஆகுவதற்கான ஆசனங்கள் காணப்பட்டன.ஜனாதிபதியைப் பெற்றுக் கொள்ள 134 ஆசனங்கள் இருந்தன. நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை ஒழிக்க 150 ஆசனங்கள் காணப்பட்டன. நிறைவேற்று ஜனாதிபதி முறைமை ஒழிக்கப்படும் என்றிருந்தால் மீதமுள்ள 16 பேரைக் கொடுத்திருப்போம். ஜனாதிபதி தேர்தல் நடத்த வேண்டிய காலம் நெருங்கியுள்ள நேரத்தில் இவர்கள் இதனை ஒழிக்க முன்வந்துள்ளனர். நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை ஒழிக்க வேண்டும் என்ற பெயரில் மக்கள் ஆணைக்கு முரணாக, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் அரசியல் ஆயுள் காலத்தை நீடித்துக் கொள்ளத் தயாராகி வருகின்றார்.

அத்துடன், நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை ஒழிக்க வேண்டும் என்ற கொள்கையைக் கொண்ட கட்சியாக இந்நாட்டு மக்களின் வாக்களிக்கும் உரிமையை இல்லாது செய்யச் செயற்படும் கொடுங்கோல் ஆட்சிக்கு நாம் ஒரு தெளிவான எச்சரிக்கையை விடுக்கிறோம்,திகதி நிர்ணயிக்கப்பட்டு ஜனாதிபதி தேர்தல் விரைவாக நடத்தப்பட வேண்டும் என்றார்.

வத்தளையில் சனிக்கிழமை (10) இடம்பெற்ற ஜனபௌர மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், நிறைவேற்று ஜனாதிபதி பதவியை இல்லாதொழித்து பாராளுமன்ற உறுப்பினர்களின் வாக்குகளினால் ஜனாதிபதியை நியமிக்க தற்போதைய ஜனாதிபதி முயற்சித்து வருகிறார்.

ஐக்கிய மக்கள் சக்தி கூட நிறைவேற்று ஜனாதிபதியின் அதிகாரத்தில் திருத்தம் செய்வதற்கு அரசியல் கொள்கை ரீதியாக விருப்பம் தெரிவித்துள்ள நிலையில், புதிய மக்கள் ஆணையொன்றின் ஊடாகவே இதனைச் செய்ய வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உள்ளது. இவ்வாறு இல்லாமல் அவ்வாறானதொன்று இடம்பெறுவதற்கு இடமளிக்கப்படமாட்டோம்.

யார் என்ன வேலைத்திட்டத்தை முன்வைத்தாலும், பேசினாலும் ரூபாய், டொலர் பிரச்சினையைத் தீர்க்காமல் நாட்டின் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது. ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் ஆற்ற வேண்டிய விடயங்களை ஆறு அம்சங்களில் முன்வைக்கும் தன்னால் முடியும்.

கணினி அறிவியல், ஆங்கிலம் மற்றும் தகவல் தொழில்நுட்ப கல்விக்கு முன்னுரிமை அளித்து, நாட்டிலுள்ள அனைத்து 10,126 அரச பாடசாலைகளும் உலகத் தரம் வாய்ந்த பாடசாலைகளாக மாற்றப்படும்.

வறுமையை ஒழிக்க ஒரு தேசிய வேலைத்திட்டம் தேவை. அஸ்வெசும மூலம் தற்காலிக நிதி நிவாரணம் வழங்கப்பட்டாலும், அது வெற்றியளிக்காமையினால், ஜன சவிய திட்டத்தை விட மேம்பட்ட திட்டமொன்று முன்வைக்கப்படும்.

நாட்டின் உயிர்நாடியாக விளங்கும் தனியார்த்துறை, தொழில் முனைவோர், நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில்துறையினர் கட்டியெழுப்பப்பட வேண்டும். சமூகத்தில் வேகமாக வளர்ந்து வரும் நடுத்தர வர்க்கத்தினதும், புதிய தலைமுறையினரதும் கருத்துக்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். அவர்கள் அடிமைகளாக இருக்க விரும்பவில்லை. அவர்களுக்குச் சுதந்திரமான, ஜனநாயக, சட்டத்தின் ஆட்சியைப் பாதுகாக்கும் ஒரு சகாப்தத்தை உருவாக்குவோம் என தெரிவித்தார்.

# “225 பேருக்கும்...

தாமும், ஒன்றிணைந்த சிவில் அமைப்புகளின் கூட்டமைப்பும் இத்தீர்மானத்தை எடுத்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

தேசிய சிவில் அமைப்பு, முன்னணியுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும்போது, அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், 225 பாராளுமன்ற உறுப்பினர்களையும் பொதுமக்கள் நிராகரித்துள்ளனர். எனவே, அதிலோர் அங்கமாக இருக்க தாம் விரும்பவில்லை என ஜனக ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

# அறுவர் கைது...

இசை நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களின் ஒழுங்கீனம், பொலிஸாரின் பற்றாக்குறை காரணமாகவும் கட்டுக்கடங்காத பார்வையாளர்கள் மேடைக்கு அருகில் கூடியதாலும் நிகழ்ச்சியில் குழப்பம் ஏற்பட்டது.

மேலதிக பொலிஸார், விசேட அதிரடிப் படையினர் களமிறக்கப்பட்ட போதும், நிலைமை கட்டுக்கடங்காது சென்றது.

கதிரை, தண்ணீர் தாங்கி உள்ளிட்ட பல பொருட்கள் சேதமாகின. நிகழ்ச்சியின்போது, பலரும் கைது செய்யப்பட்டு கடும் எச்சரிக்கையின் விடுவிக்கப்பட்டனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது ஒருவர் மயக்கமுற்றதுடன், பலரும் காயமடைந்தனர். தற்போதைய நிலையில், மூன்று யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது, 25,000 ரூபாய் அனுமதிச் சீட்டு, 7,000 ரூபாய் அனுமதிச் சீட்டு, 3,000 ரூபாய் அனுமதிச் சீட்டு என கட்டணத்திற்கு ஒதுக்கப்பட்ட ஆசனங்களில் அமர்ததும் அதன்பின்னே, இலவசமாக நின்றவாறு இசை நிகழ்ச்சியை பார்க்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஆனாலும், கட்டணத்துக்காக ஒதுக்கப்பட்ட ஆசனங்களில் பெரும்பாலான கூட்டம் அனுமதிச் சீட்டுகளே இல்லாமல் நுழைந்ததால் குழப்பம் ஏற்பட்டது.

# “அவசரம் இல்லை”

ஜனாதிபதி தேர்தல் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டால் அந்த வேலைத்திட்டத்தை முன்னெடுப்பதற்கு பெருமளவு பணம் செலவழிக்கப்படும் என கண்டறியப்பட்டுள்ளது.

ஏனைய கட்சிகளைப் போன்று இவ்வாறான விடயங்களைச் செய்வதற்கு தமது கட்சியிடம் பணம் இல்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் கட்சிக்கு ஏற்கெனவே பல யோசனைகள் கிடைத்துள்ளதாக குறிப்பிட்ட காரியவசம், அந்த முன்மொழிவுகளை பரிசீலித்து வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

# “மக்களுக்கு புரிந்து விட்டது”

நாட்டைக் கட்டியெழுப்பும் திட்டம் ஐக்கிய தேசியக் கட்சியிடம் இருப்பதால், நாட்டில் உள்ள எந்தவோர் அரசியல் கட்சியுடனும் இணைந்து செயற்படும் திறன் ஐக்கிய தேசியக் கட்சிக்கு இருப்பதாக விஜயவர்தன தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் கம்பஹா மாவட்ட மாநாட்டில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே விஜயவர்தன மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மக்கள் விடுதலை முன்னணி, தமிழர் அமைப்பு ஆகியன இணைந்து இந்த நாட்டை கட்டியெழுப்ப முடியுமானால் யாருடனும் இணைந்து இந்த நாட்டை கட்டியெழுப்பத் தயார் என்ற செய்தியை நினைவுபடுத்த வேண்டும் என்றார்.

# ‘அசேல’வுக்கு நஞ்சூட்ட...

தர்பூசணி (Watermelon) காய்க்குள் விஷத்தைக் கலந்தே இந்த நபர் அசேல என்ற யானைக்குக் கொடுப்பதற்கு முயற்சித்துள்ளார் என்பது தெரியவந்துள்ளது. கண்டி-கட்டுகித்துல, பன்வில பகுதியைச் சேர்ந்த ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

வேறு சில சம்பவங்களுக்காக கண்டி பொலிஸாரால் சந்தேக நபர் கைது செய்யப்பட்டதாகவும் விசாரணையின்போது இந்த சம்பவம் அம்பலமாகியுள்ளது. இதுதொடர்பில் கதிர்காமம் பொலிஸாருக்கு அறிவிக்கப் பட்டதையடுத்து. அதிகாரிகள் குழுவை அனுப்பி சந்தேக நபரை அழைத்து வந்ததாகவும் கதிர்காமம் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# “ரூ.2,000 கோடி வேண்டும்”

ஜனாதிபதித் தேர்தலை இவ்வருடம் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. அதனடிப்படையில், 10 கோடி ரூபாய் மதிப்பீட்டுத் தொகையாக அமைச்சரினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது என்றார். அந்த மதிப்பீட்டு ரூபாய்க்கு, பாராளுமன்றம் ஒப்புதல் அளித்துள்ளது என்றார்.

# நாமல் எம்.பி விசேட சந்திப்பு

அயோத்தி ராமர் கோவிலில் வழிபாடுகளில் ஈடுபட்டார்.

உத்தரப்பிரதேசத்தில் தங்கியிருந்த பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, லக்னோவில் முதல்வர் யோகி ஆதித்யநாத் மற்றும் துணை முதல்வர் பிரிகேஷ் பதேக் ஆகியோரை சந்தித்துள்ளார்.

# கழுத்தில் கயிறு இறுகி சிறுவன் மரணம்

தனி வீட்டில் வசிக்கும் பாடசாலை சிறுவனான இவர், வீட்டுக்கு அருகில் தேயிலைத் தோட்டத்தில் சவுக்கு மரத்தில் கயிறு கட்டி விளையாடிக் கொண்டிருந்த போதே இவ்வனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

மாகாஸ்தோட்ட பகுதியில் தனி வீட்டில் தாய் மற்றும் பெண் பிள்ளைகள் இருவர் ஆண் பிள்ளை ஒருவருடன் நால்வர் வசித்து வருகின்றனர்.

தனது கணவன் இறந்து ஐந்து வருடங்களாகிய பின், தாய் பிள்ளைகளைப் படிக்க வைத்து வாழ்ந்து வரும் நிலையில், மூத்த மகள் பல்கலைக்கழக படிப்புக்குச் சென்றுள்ளார். வீட்டில் சிறிய மகள், தாய் மற்றும் சம்பவத்தில் உயிரிழந்த சிறுவன் என மூவர் வசித்து வந்துள்ளனர்.

சவுக்கு மரத்தில் கயிறு கட்டி அச்சிறுவன் வழமையாக விளையாடுவார். அவ்வாறு ஞாயிற்றுக்கிழமையும் (11) விளையாடிக்கொண்டிருந்த போதே இவ்வனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

சடலம் நுவரெலியா மாவட்ட நீதவானின் மரண விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட பின் பிரேதப் பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்படவுள்ளதாகவும் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுப்பதாகவும் நுவரெலியா பொலிஸார் தெரிவித்தனர்.

# ஆஸி. பெண்ணின் அந்தரங்கத்தை தொட்டவருக்கு சிக்கல்

கொழும்பிலிருந்து கண்டிக்குச் செல்லும் வழியில் கடுகண்ணாவை பிரதேசத்தில் இயங்கும் மசாஜ் நிலையத்தில் குறித்த சம்பவம் வெள்ளிக்கிழமை (09) இடம்பெற்றுள்ளதாகவும் அதன் பின்னர் கடுகண்ணாவை பிரதேசத்தில் இருந்து நுவரெலியாவிற்கு வருகை தந்து, நுவரெலியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தனக்கு நேர்ந்த சம்பவம் குறித்து அவுஸ்திரேலியா பிரஜையான 39 வயதுடைய பெண், பொலிஸ் நிலையத்தில் செய்துள்ள முறைப்பாட்டில், தனது கணவர் மற்றும் குழந்தையுடன் சுற்றுலா நிமித்தம் ஜனவரி மாதம் 29ஆம் திகதி இலங்கைக்கு வந்தோம். கூடுதலான சுற்றுலா இடங்களைப் பார்வையிட்டுக் கடந்த 9ஆம் திகதி கடுகண்ணாவை பிரதேசத்தில் ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்தோம். அன்று மாலை குறித்த ஹோட்டலில் மசாஜ் நிலையத்துக்குச் சென்றிருந்தேன்.

தலை மற்றும் தோள்பட்டை போன்ற பகுதிகளுக்கு மசாஜ் செய்துகொள்ளச் சென்றிருந்தேன்.

அங்கு மசாஜ் செய்த ஊழியர் எனது அந்தரங்க பகுதிகளை அவசியமின்றி தொட்டார். உடனடியாக அங்கிருந்து வெளியேறி விட்டேன். அதன் பின்னரே அங்கிருந்து நுவரெலியாவுக்கு உடனடியாக வருகை தந்தோம் என அந்த முறைப்பாட்டில் கூறினார்.

குறித்த முறைப்பாட்டின் பிரகாரம் நுவரெலியா பொலிஸார், கண்டி, கடுகண்ணாவை பொலிஸாருக்கு தெரிவித்துள்ளதுடன் சுற்றுலா பொலிஸாரின் உதவியுடன் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்தனர்.

# “விரும்பத்தகாத...

எமது மக்களின் வாழ்வாதாரத்தினையும் வாழ்வியலையும் அடுத்த கட்டத்திற்கு முன்னேற்றுவதற்கு எமது புலம்பெயர் உறவுகளின் முதலீடுகளை நாங்கள் எதிர்பார்த்திருக்கின்ற வேளையில், புலம்பெயர் முதலீட்டாளர் ஒருவரின் முன்முயற்சியில் ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு நிகழ்வில், இவ்வாறான அசௌகரியங்கள் ஏற்படுவது, மக்கள் நலன் சார்ந்த எமது எதிர்பார்ப்புக்களுக்குப் பின்னடைவுகளையே ஏற்படுத்தும்.

எமது மக்களைத் தொடர்ந்தும் அவலங்களுக்குள் அமுழ்த்தி வைத்திருந்து, அதன்மூலம் அரசியல் இலாமீட்ட முனைகின்ற சுயலாப தரப்புக்கள், எமது பிரதேசங்களில் முதலீடுகளுக்கு உத்தரவாதம் இல்லை என்ற கருத்தினை பரப்புவதில் கண்ணும் கருத்துமாக செயற்பட்டு வருகின்றனர். அவ்வாறானவர்களின் கருத்துக்களை வலுப்படுத்துவதாக இவ்வாறான சம்பவங்கள் அமைந்து விடும்.

கிடைக்கின்ற தகவல்களின் அடிப்படையில், ஏற்பாட்டாளர்களின் எதிர்பார்ப்பிற்கும் அதிகமான மக்கள் வருகை தந்தமையும், ஒழுங்குபடுத்தலில் இருந்த குறைபாடுகள் சிலவுமே இந்த விரும்பத்தகாத சம்பவத்திற்குக் காரணமாக அமைந்துள்ளது.

இந்தச் சம்பவமானது, இசை நிகழ்ச்சியைக் கண்டுகளிக்கும் எதிர்பார்ப்புடன் காத்திருந்த எமது மக்களுக்கும், ஆர்வத்துடன் வருகைதந்த தென்னிந்தியக் கலைஞர்களுக்கும் அதேபோல் ஏற்பாட்டாளர்களுக்கும் ஏமாற்றத்தினை அளித்திருக்கின்றது.

இவ்வாறு பாதிக்கப்பட்ட அனைவருக்கும் எனது வருத்தத்தினை தெரிவித்துக் கொள்வதுடன், எதிர்காலத்தில் இவ்வாறான நிகழ்வுகளை ஏற்பாடு செய்கின்றபோது, தேவையான முன்னேற்பாடுகள் மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகளைச் சம்மந்தப்பட்ட தரப்புக்களுடன் கலந்துரையாடிச் செய்வதை ஏற்பாட்டாளர்கள் உறுதிப்படுத்த வேண்டும் என்பதையும் வலியுறுத்த விரும்புகின்றேன்.” என்று தெரிவித்துள்ளார்.

க.பொ.த (சா/த) பரீட்சை

# உத்தியோகபூர்வ அறிவிப்பு விரைவில்

எதிர்வரும் மே மாதம் நடைபெறவிருந்த க.பொ.த சாதாரண தரப் பரீட்சை பிற்போடப்படும் என்ற ஊகத்தை அடுத்து, பரீட்சை தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்பு விரைவில் வெளியிடப்படும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

க.பொ.த உயர்தரப் பரீட்சை 2022 (2023)க்கான விடைத்தாள்களை மதிப்பீடு செய்யும் பணிகள் ஏற்கெனவே இடம்பெற்று வருவதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், விடைத்தாள்களை மதிப்பீடு செய்வதற்காக தெரிவானவர்களுக்கு வழங்கப்படும் ரூ.1,450 உதவித்தொகையை ரூ.5 ஆக உயர்த்த முடிவு செய்யப்பட்டது. 2023 (2024) க.பொ.த உயர்தர விடைத்தாள்களை மதிப்பிடும் பரீட்சார்த்திகளுக்கும் அதே கொடுப்பனவை வழங்க அமைச்சரவை தீர்மானித்திருந்தது.

2023 (2024) க.பொ.த (உ/த) பரீட்சையின் பிரதான கண்காணிப்பாளர்கள், இணை கண்காணிப்பாளர்கள், தலைமை மேற்பார்வையாளர்கள் மற்றும் மேலதிக பிரதான மேற்பார்வையாளர்கள் ஆகியோருக்கும் 2022 (2023) க.பொ.த (உ/த) பரீட்சைக்கான திருத்தப்பட்ட கொடுப்பனவுகள் வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# ‘பாய் பங்கலா பாய்’ குழுவினருக்கு உதவிய ஜீவன்

எஸ்.சதீஷ்





பொகவந்தலாவை- கெர்க்கஸ்வோல்ட் (லெட்சுமி தோட்டம்) மத்திய பிரிவு தோட்டத்தைச் சேர்ந்த ‘தியட்டர் மேட்ஷ்’ நாடக குழுவினருக்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும் நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அமைப்பு சமுதாய அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் நிதியுதவி அளித்துள்ளார்.

அதன்படி, ‘தியட்டர் மேட்ஷ்’ குழு தயாரித்துள்ள ‘பாய் பங்கலா பாய்’ எனும் நாடகத்தை அரங்கேற்றுவதற்காக, இந்தியா- கொல்கத்தாவுக்கு எதிர்வரும் மார்ச் மாதம் 20ஆம் திகதி செல்வதற்கு ஒரு மில்லியன் ரூபாய் பணத்தையும் இந்தியாவுக்குச் செல்வதற்கு அக்குழுவைச் சேர்ந்த 20 பேருக்கான விசாக்களையும் அமைச்சர் ஜீவன் தொண்டமான் பெற்றுக்கொடுத்துள்ளார்.

இந்த ‘தியட்டர் மேட்ஷ்’ நாடகக் குழுவில் பாடசாலை மாணவர்கள் 14 பேரும் பயிற்றுவிப்பாளர்கள் அறுவரும் அடங்குகின்றனர். மலையக பெருந்தோட்டபகுதிகளில் இதுபோன்ற பல்வேறு திறமையுடையவர்கள் காணப்படுகிறார்கள். இதில் சிறுவர்களோடு முதன்முறையாக இந்த நாடகக் குழுவினை வழிநடத்தி இந்தியாவுக்கு அழைத்துச் செல்லும் செல்வராஜ் லீலாவதி மற்றும் ராசையா லோகாந்தன் ஆகிய இருவருக்கும் வாழ்த்துக்களை தெரிவித்த அமைச்சர் ஜீவன் தொண்டமான், ‘தியட்டர் மேட்ஷ்’ நாடக குழுவினரை சந்தித்ததில் தான் பெருமையடைவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, பாரிய உதவியினை வழங்கிய அமைச்சர் ஜீவன் தொண்டமானுக்கு ‘தியட்டர் மேட்ஷ்’ குழுவினர் நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவிப்பதில் பெருமிதம் அடைவதாகத் தெரிவித்துள்ளனர்.

# கலை நிகழ்ச்சியும் பட்டமளிப்பு விழாவும்

பு.கஜிந்தன்

யாழ். இணுவிலில், சிறுவர் விருத்திமைய மாணவர்களின் கலை நிகழ்ச்சி மற்றும் பட்டமளிப்பு விழா இணுவில் பொது நூலகத்தில் ம.கஜந்தரூபன் தலைமையில் சனிக்கிழமை (10) நடைபெற்றுள்ளது.

இந்நிகழ்வு மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பமாகி, விருந்தினர்களின் உரைகள், காவடி நடனம், கிராமிய நடனம் உள்ளிட்ட பல கலைநிகழ்ச்சிகளும், பட்டமளிப்பு வைபவமும் இடம்பெற்றுள்ளது.

குறித்த நிகழ்வில் நிகழ்ச்சியின் ஏற்பாட்டாளர்கள், மாணவர்கள், பெற்றோர் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டுள்ளனர்.









மோட்டார் சைக்கிள் விபத்தில்

# பொலிஸ் கான்ஸ்டபிள் பலி

ரஸீன் ரஸ்மின்



புத்தளம்- பல்லம நந்திமித்ர பாடசாலைக்கு அருகில் சனிக்கிழமை (10) இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சிலாபம் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றி வந்த ரிதிபென்திஎல்ல, 2ஆம் கட்டை பகுதியை சேர்ந்த 22 வயதுடைய பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரே இந்த விபத்தில் பலியாகியுள்ளார்.

சிலாபம் பகுதியில் இருந்து ஆனமடுவை நோக்கிப் பயணம் செய்த மோட்டார் சைக்கிள், கட்டுப்பாட்டை இழந்து, வீதியை விட்டு விலகி மரமொன்றில் மோதியே இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த குறித்த பொலிஸ் கான்ஸ்டபிளை உடனடியாக சிலாபம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள போதிலும் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாகவும் இந்த விபத்து சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் பல்லம பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# நீர்கொழும்பில் ஒருவர் சுட்டு கொலை

எம்.இஸட்.ஷாஜஹான்


நீர்கொழும்பு பிரதேசத்தில் சனிக்கிழமை (10) இரவு 7.30 மணியளவில் இனம் தெரியாத இருவரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கி பிரயோகத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த நபர் விடுதி ஒன்றில் பணிபுரிந்து வந்த நீர்கொழும்பு - குரணை பிரதேசத்தை சேர்ந்த ரெக்ஸ் சல்காது என்ற 62 வயதுடையவர் என தெரியவந்துள்ளது.

குறித்த நபர் கல்கந்த சந்தியிலிருந்து மினுவாங்கொட வீதிக்கு திரும்பும்போது, மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத இருவர் துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டு தப்பிச் சென்றுள்ளதாகவும் உயிரிழந்தவரின் சடலம் நீர்கொழும்பு வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

துப்பாக்கி பிரயோகம் நடத்தி விட்டு தப்பியோடும்போது, மோட்டார் சைக்கிளை கைவிட்டு சென்றுள்ளனர். அதனை மீட்டுள்ள நீர்கொழும்பு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# பொலிஸ் உத்தியோகத்தர் சடலமாக மீட்பு



எம்.றொசாந்த்

யாழ்ப்பாணம் - கோப்பாய் பொலிஸ் நிலையத்தின் அறையொன்றிலிருந்து ஞாயிற்றுக்கிழமை (11) அதிகாலை பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு-செங்கலடியைச் சேர்ந்த உதயராஜ் என்ற பொலிஸ் உத்தியோகத்தரின் சடலமே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது.

குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் தவறான முடிவெடுத்து தனது உயிரை மாய்த்துள்ளார் எனவும் உயிரிழப்புக்கான காரணம் தெரியவரவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# ‘யன்னல்’ விவகாரம்: காதலன் கைது

பிபில பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட நாகல பிரதேசத்தில் ‘யன்னல்’ விவகாரத்தில் காதலன் கைது செய்யப்பட்ட சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

அதன்படி, தன்னுடைய வீட்டுக்கு இரவு வருமாறும், தான் உறங்கும் அறையின் யன்னலை திறந்து வைத்திருப்பதாகவும் சிறுமி தெரிவித்துள்ளார்.

அதன்படி, தன்னுடைய சின்ன காதலியின் வீட்டுக்கு, வியாழக்கிழமை (08) இரவு சென்ற காதலன், சிறுமியான காதலியை பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளார்.

பிபில - நாகல பிரதேசத்தில் வசிக்கும் 12 வயது 6 மாதங்களேயான சிறுமி, பக்கத்து வீடொன்றில் வசிக்கும் 25 வயதான இளைஞனுடன் காதல் வயப்பட்டுள்ளார்.

சிறுமியின் கோரிக்கைக்கு ஏற்ப, அச்சிறுமியின் விருப்பத்தின் பிரகாரமே, பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளார் என விசாரணைகளின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது.

தன்னுடைய விருப்பத்தின் பிரகாரமே இது நடந்துள்ளதாக தன்னுடைய தாயிடம் அச்சிறுமி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில், சிறுமியின் தாய், மறுநாள் வெள்ளிக்கிழமை (09) பொலிஸில் செய்த முறைப்பாட்டின் அடிப்படையிலேயே காதலன் கைது செய்யப்பட்டுள்ளார்.

சிறுமியை வைத்திய பரிசோதனைக்காக மொனராகலை மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த பிபில பொலிஸார், கைது செய்த இளைஞனை, பிபில நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கைகளை எடுத்துள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

# துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் பலி

புத்தளம் - மஹகும்புக்கடவல, செம்புகுளிய பிரதேசத்தில் சனிக்கிழமை (10) பிற்பகல் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தில் காயமடைந்த நபர் புத்தளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்த நிலையில், சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ணர்.

காணி தகராறு காரணமாக துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளதாகவும், சம்பவம் தொடர்பில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.



# ஏற்பாடு குளறுபடிகளும் கலாசாரத்துக்கு விழுந்த பேரடியும்

யாழ்ப்பாணத்தில் வெள்ளிக்கிழமை (09) இரவு இடம்பெற்ற பாடகர் ஹரிஹரனின் இசை நிகழ்ச்சி குழப்ப நிலையில் நிறைவடைந்தமை யாவரும் அறிந்த விடயமாகும். இதற்கு பல்வேறான காரணங்கள் கூறப்பட்டாலும் ரசிகர்கள் நடந்துகொண்ட விதம், முகஞ்சுளிக்கச் செய்துவிட்டது.

தென்னிந்தியப் பாடகர்கள், நடிகர்களின் வருகை இலங்கையின் சுற்றுலாத்துறைக்கு குறிப்பிட்ட சதவீத பங்களிப்பைச் செலுத்துகின்றது. இந்தியத் தமிழ், இந்தி திரைப்படங்களுடன் இலங்கையில் வாழும், தமிழ், சிங்கள மக்களுக்கும் ஒரு பிணைப்பு உள்ளது.

தென்னிந்தியாவில் இருந்து வெளியாகும் படங்களில் சண்டைக் காட்சிகளைப் பார்த்துவிட்டே, யாழ்ப்பாணத்தில் பெரும் அட்டகாசத்தில் வாள் வெட்டு, ஆவா குழுவினர், ஈடுபடுகின்றனர் என்ற குற்றச்சாட்டுகளும் உள்ளன.

இவ்வாறான நிலையில், ஹரிஹரனின் இசை நிகழ்ச்சி யாழ். முற்றவெளியில் நடந்துகொண்டிருந்தபோது, அங்கிருந்த இளைஞர்கள் பெரும் குழப்பங்களை ஏற்படுத்தி, தளபாடங்கள், பாரிய நீர்த்தாங்கிகள் உள்ளிட்டவைகளை அடித்து நொறுக்கிச் சேதப்படுத்தியுள்ளனர். இவை, இரசிகர்களின் கீழ்த்தரமான இரசனையைப் படம் பிடித்துள்ளது.

ஓர் இசைக்கு, இன,மொழி உள்ளிட்ட எந்தவொரு வேறுபாடுகளும் இல்லை. ரசிக்க தெரிந்தவனுக்கு எந்த மொழியில் இசைக்கப்பட்டாலும் அது இசையே.

ஆனால், சிங்களத்தில் பேசப்பட்டதால்தான், ரசிகர்கள் கோபமடைந்து, ஆக்ரோஷமாக நடந்துகொண்டதாக சமூக வலைத்தளங்களில் பதிவிடப்பட்டுள்ளன.

எனினும், கட்டணம் செலுத்தாமல், வெளியே நின்று கொண்டிருந்தவர்களை, உள்ளே செல்ல அனுமதியளித்ததால், திமுதிமுவென நுழைந்தவர்கள், கட்டணம் செலுத்தி அமர்ந்திருந்தவர்களின் இடங்களுக்குச் சென்று, நாற்காலியில் அமர்ந்துகொண்டனர் என்றும், கட்டணங்களைச் செலுத்தியோர் நின்று கொண்டிருந்தனர். ஆகையால் குழப்பகரமான நிலை ஏற்பட்டது என்றும் அறியமுடிகின்றது.

இந்தவிடயத்தில், ஏற்பாட்டுக் குழுவினரின் அனுபவமின்மை அம்பலமாகியுள்ளது. கட்டணங்களை வசூழித்து நிகழ்ச்சியை நடத்தவேண்டுமாயின், கட்டாயமாக உள்ளக அரங்கு இருக்கவேண்டும். இல்லையே முறையான பாதுகாப்புடன் அரங்கு அமைக்கப்படவேண்டும்.

இவற்றுக்கெல்லாம் அப்பால், யாழ். முற்றவெளியில் நடந்த ஹரிஹரனின் இசைநிகழ்ச்சி, இந்தியத் தொலைக்காட்சி ஒன்றுக்கு விற்பனைச் செய்யப்பட்டு விட்டதாகும், இந்த இசைநிகழ்ச்சியை ஒளிப்பதிவு செய்வதற்கு, பார்வையாளர்களின் மத்தியில், மேடையமைக்கப்பட்டு கமெராக்கள் பொருத்தப்பட்டுள்ளதாகவும் இதனால் ரசிகர்கள் கோபமடைந்து விட்டனர் என்றும் கூறப்படுகின்றது.

எனினும், அங்கிருந்த பாதுகாப்பு தரப்பினர், சிங்களத்தில் பேசியதால், தங்களுக்கு விளக்கவில்லையென, இரசிகர்கள் குழப்பமடைந்து விட்டனர் என்றொரு தகவல் வெளிவந்துள்ளது. மற்றொரு மொழியை விளங்கிக்கொள்வதில் சிரமமில்லை.
எனினும், விளங்கிக்கொள்ளவே மாட்டோமென விதண்டாவாதமாகச் செயற்படுவோரை என்ன செய்வது.

தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவேண்டும் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. அதனை எல்லா சந்தர்ப்பங்களிலும் கையில் எடுப்பதுதான் கூடாத செயல். அதுமட்டுமன்றி, ஏற்பாட்டுக் குழுவினரும். இன்னும் பல விடயங்களைச் செய்திருக்கவேண்டும். அப்படிச் செய்திருந்தால், கலாசாரத்துக்கு அடி விழுந்திருக்காது.

தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




# நாட்டுக்கான ஒற்றுமையின் சாத்தியம்?

**லக்ஸ்மன்**

“நாடு பாரிய பொருளாதார நெருக்கடியில் இருந்து குறுகிய காலத்தில் மீட்சியடைந்துள்ளமை உலக சாதனையாகும். பொருளாதார மீட்சிக்கான நடவடிக்கைகளை வெளிப்படைத்தன்மையாக அறிவித்துள்ளேன். எந்தத் திட்டங்களையும் நான் மறைக்கவில்லை. நாடு மிக மோசமான நெருக்கடிகளை எதிர்கொண்டிருந்தபோது, நான் அரசியலுக்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. நாட்டுக்கு முக்கியத்துவம் வழங்கி கடுமையான தீர்மானங்களை எடுத்து அவற்றை உறுதியாகச் செயற்படுத்தியுள்ளேன்” இவ்வாறு ஒன்பதாவது பாராளுமன்றத்தின் ஐந்தாவது புதிய கூட்டத்தொடரை (07.02.2024) ஆரம்பித்து வைத்த கொள்கை பிரகடன உரையின் போது ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்திருந்தார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இம்முறை நடைபெற்ற சுதந்திர தின நிகழ்வில் தனது சம்பிரதாயபூர்வமான உரையைத் தவிர்த்திருந்தார். சுதந்திர தின வைபவ உரை என்பது ஒரு ஜனாதிபதிக்கு இருக்கின்ற கௌரவமும் பாரம்பரியமுமான ஒன்று. ஆனால் அதனை அவர் தவிர்த்ததற்குப் பல காரணங்கள் இருந்தாலும் உண்மையில் அவர், நாட்டுக்காக ஏதோ ஒன்றைச் சொல்லியிருக்கிறார் என்பதே இந்த இடத்தில் விளங்கிக் கொள்ளப்படவேண்டும்.

ஒவ்வொரு ஜனாதிபதியும் வெற்றி முழக்கத்துக்கான அல்லது தம்மைப்பற்றி தம்பட்டம் அடிப்பதற்கான இடமாக அந்த இடத்தினைப் பயன்படுத்திக் கொள்வது வழமை. ஆனால், இம்முறை அது நடைபெறவில்லை. இருந்தாலும் சுதந்திரதினத்தின் பின்னர் பாராளுமன்றக் கூட்டத்தொடரை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய ஜனாதிபதி அங்கு தன்னுடைய நிலைப்பாட்டையும் நாம் எதிர் கொண்டிருக்கும் பிரச்சினைகளையும், நாடு அடைந்துவரும் முன்னேற்றங்களையும் நமக்குத் தேவையானவைகளையும் செல்லியிருக்கிறார்.

அதேநேரத்தில், ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடன உரையானது நாட்டில் புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினை தொடர்பில் எந்த ஒரு ஆழமான கருத்தையும் உள்ளடக்கியதாக இருக்கவில்லை என்பது இந்த இடத்தில் கவனிக்கப்படவேண்டும். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் உள்ளவர்கள் பற்றியும், ஐக்கிய மக்கள் சக்தி தொடர்பிலும், மக்கள் விடுதலை முன்னணி தொடர்பிலும் தன்னுடைய மன ஆதங்கங்களைக் கொட்டித் தீர்ப்பதற்கான உரையாகவே அது அமைந்திருந்தது. “ஒன்பது மாகாணங்களினதும் பொருளாதாரத்தைப் பலப்படுத்த அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்படும். அரசியலமைப்பில் மாகாண சபை அதிகாரங்களின் மூன்றாவது அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மாகாண சபைகளுக்கு சில அதிகாரங்களை உரிய வகையில் வழங்குவோம். தொழிற்கல்வி, விவசாயம் போன்ற துறைகளை உதாரணமாகக் கூறலாம். அதன் மூலம் ஒவ்வொரு மாகாணத்திலும் பொருளாதார வளர்ச்சியைத் துரிதப்படுத்த முடியும். மாகாணங்களுக்கு இடையில் பொருளாதாரப் போட்டித் தன்மையை உருவாக்குவதன் மூலம், ஒன்பது மாகாணங்களும் ஒரே நேரத்தில் அபிவிருத்தியடைவதற்கான வாய்ப்பு உருவாகும்” என்று சில கருத்துக்களுடன், தமிழ் முஸ்லிம் கட்சிகளின் ஒற்றுமைப்படுதலைக்குறிப்பிட்டு முடித்துக் கொண்டிருக்கிறார்.

இருந்தாலும், பாராளுமன்றத்தில் அவர் கூட்டத்தொடரை ஆரம்பித்து உரையாற்றுவதற்கு முன்னர் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச அணியினர் வெளியேறி தங்களது எதிர்ப்பைக் காட்டியிருக்கின்றனர். ஜனாதிபதி தன்னுடைய பெருந்தன்மையைக் காண்பிக்க முனைகையில் எதிர்க்கட்சித் தலைவர் அணி தம்முடைய தன்மையை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். ஜனாதிபதி தன்னுடைய உரையில் ஒற்றுமையைப் பற்றி விளக்கமளித்திருக்கிறார். அவ்வேளையிலேயே ஒற்றுமைக்குலைவு வெளிக்காட்டப்பட்டிருக்கிறது.

இந்த ஒற்றுமைக்குலைவும், கருத்தொருமைப்பாடின்மையும் இலங்கையின் வரலாற்றில் இன்று நேற்று உருவான விடயமல்ல. இந்தக் கருத்தொருமைப்பாடின்மை காரணமாகவே இத்தனை அரசியல் கொள்கைகளும், அரசியல் கட்சிகளும் உருவாகின. இதற்கு தமிழர்கள், சிங்களவர்கள், முஸ்லிம்கள் என்ற பாகுபாடு பார்க்கப்படத் தேவையில்லை. இதனாலேயே இலங்கை நாட்டில் இன்றும் இன, வர்க்க பேதப் பிரச்சினைகள் தொடர்வதாகச் சொல்ல முடியும். ஒருவர் ஒன்றுக்காக நடவடிக்கை எடுத்தால் மற்றையவர் அதனை எதிர்ப்பதும் எரிப்பதும் குழப்புவதும் இதற்கு நல்லதொரு உதாரணமாகும். (தமிழ் மக்களது பிரச்சினைகளில் செய்யப்பட்ட ஒப்பந்தங்களும் கொண்டுவரப்பட்ட தீர்வுகளையும் எடுத்துக்காட்டலாம்.)

வரலாற்றில், 1949இல் ஜி.ஜி. பொன்னம்பலம் தலைமையிலான தமிழ் காங்கிரஸில் இருந்து சிலர் பிரிந்து சமஷ்டி கட்சியை உருவாக்கிக் கொண்டனர். 1951ல், ஐக்கிய தேசியக் கட்சித் தலைமையிலான அரசாங்கத்தில் இருந்து விலகிச் சென்ற எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை உருவாக்கினார். இது சுதந்திரம் கிடைத்த சில வருடங்களில் உருவான பிரிவாகும். அதேபோன்று, அண்மைய உதாரணமாகச் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து தனிவழி சென்ற மஹிந்த அணியினர் சிறிலங்கா பொதுஜன பெரமுனவை உருவாக்கின் கொண்டனர். அதேநேரத்தில், கடந்த ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து விலகிய சஜித் பிரேமதாச அணியினர், ஐக்கிய மக்கள் சக்தி என்ற தனியொரு அணியை உருவாக்கிக் கொண்டனர். பிரிவுகளுக்கும் கருத்தொருமைப்பாடின்மைக்கும் இதுபோன்று பல உதாரணங்களைக் கூற முடியும்.

இவ்வாறான நிலையில், நாம் எதனை அடையப்போகிறோம். நமக்காகக் காத்திருப்பது என்ன என்பதனையே நாம் சிந்திக்க வேண்டுமாக இருந்தாலும் தவறவிடுகிறோம். ஒரு ஜனாதிபதியோ, எதிர்க்கட்சித் தலைவரோ நாட்டைப்பற்றிச் சிந்திப்பதனைத் தவிர்த்துத் தனிப்பட்ட கோப தாபங்கள் உள்ளிட்ட விடயங்களுக்கு முக்கியத்துவம் வழங்கிச் செயற்படுவது நாட்டுக்குப் பாதகமானதே.

இந்த இடத்தில், கடந்த கால தவறுகளைத் தயக்கமின்றி சீர்தூக்கிப்பார்த்து, அவற்றிலிருந்து பாடம் கற்று, நாட்டுக்கான தேசியப் போக்கை மீண்டும் உருவாக்க அர்த்தமுள்ள நடவடிக்கைகளை எடுக்காத வரை நாடு தழுவிய தேசிய மறுமலர்ச்சியை ஏற்படுத்த அரசியல் தலைவர்களுக்கு முடியாது என்றே சொல்லிக்கொள்ள முடியும். அவ்வாறானால் அவர்களுக்கு அந்த ஞானம் இல்லை என்றே அர்த்தப்படும்.

உலகின் மற்றைய காலனித்துவ நாடுகளைப் போலவே இலங்கையும் காலனித்துவவாதிகளின் கைகளால் பெரும் துன்பங்களை அனுபவித்தது. 1505-1948 வரை நம்மைச் சுரண்டிய மற்றும் சூறையாடிய காலனித்துவ ஆட்சியாளர்கள் மீது 1948க்குப் பின் தொடரும் நமது துன்பங்களுக்குப் பழி சுமத்துவது தவறாகும். தங்களது தவறுகளை மறைப்பதற்காகவே இது நடைபெறுவதாகவும் கொள்ளமுடியும். அது போன்றே அண்மைய காலங்களில் நடைபெற்றுவருகின்ற தேசிய அரசியல் செயற்பாடுகளும் இருந்து வருவதாகக் கொள்ளலாம். கடந்த காலப் பிரச்சினைகளையும் குழப்பங்களையும் மறந்து நாட்டின், மக்களின் தேவையறிந்து செயற்பட முனைவதே காலத்தின் தேவையாகும். இந்த இடத்தில், பகீஸ்கரிப்பதும், வெளியேறுவதும், வெளிநடப்புச் செய்வதும் நாட்டிற்குப் பயன் விளைவிக்குமா என்பது நினைவில் கொள்ளப்படவேண்டும்.

இவ்வாறான நிலையில்தான், தமிழ் மக்களது அரசியல் தீர்வு விடயம் நாட்டின் பொருளாதார நெருக்கடிக்குள், சிங்களக் கட்சிகளின் ஒருமைப்பாடின்மைகளுக்கு மத்தியில் பெரிது படுத்தப்படும் விடயமாக இல்லை என்பது புலப்படுகிறது. நாட்டின், நாட்டு மக்களின் பிரச்சினைகளுக்கு சரியான தீர்வினை முன்வைக்க முடியாது. வெளிநடப்பொன்றே தீர்வு, எதிர்ப்புகளைக் காண்பிப்பதொன்றே முடிவென்றெண்ணும் நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் குறைவாகவே காணப்படுகின்ற நாட்டில் எவ்வாறான எதிர்பார்ப்புகளை நாம் கொள்ளமுடியும்.

ஜனாதிபதி உள்நாடு, வெளிநாடு என்ற வித்தியாசமின்றி போகும் இடமெல்லாம், பேசும் நேரத்திலெல்லாம் ஒற்றுமையைப் பற்றியே பேசும் நிலையை உருவாக்கியது யார் என்று மாத்திரமே நாம் கேட்டுக் கொள்ள முடியும்.

1948இல் முடிவுக்கு வந்த ஏறக்குறைய நான்கரை நூற்றாண்டு காலனித்துவ ஆட்சி முடிவுக்கு வந்தபோது, ஏற்படுத்தத் தவறிய ஒற்றுமை எதிர்வரும் காலத்திலேனும் ஏற்படுமா என்பது சந்தேகமே. வரலாற்றில் தவறுகளை இழைத்தவர்களாகவே வாழப்பழகிப்போன இலங்கையில் இன மற்றும் சமூகப் பிளவுகளைக் களைந்து இனங்களுக்கிடையிலான, மதங்களுக்கிடையிலான மற்றும் கலாசாரங்களுக்கிடையிலான நல்லிணக்கம் ஏற்படுத்தப்படுமா, அரசியல் ஒற்றுமை உருவெடுக்குமா? காலத்தின் கைகளில் விட்டுவிடுவோம்.



# வாழ்வியல் தரிசனம்

பிரதி உபகாரங்களை எதிர்பாராதவர்கள், ஆசைகள் அற்றவர்கள்; பிறருக்கு உதவுவதில் பரந்த மனம் உள்ளவர்களாக இருப்பார்கள். தாங்கள் கொடுத்ததை விளம்பரம் செய்யாதவர்கள். உண்மையான கொடையாளிகள்.

ஏழைகளுக்கு வலிந்து உதவிகளைச் செய்தாலும் அதை ஏற்றவர்கள், பின்னர் அவர்களை ஏறெடுத்தும் பார்ப்பதில்லை. சகல மக்களின் உழைப்பினால்தான் உலகம் வாழ்கின்றது. ஆனால், இன்னமும் ஏழை மக்களுக்கு உதவுபவர்கள் குறைந்தவர்களாகவே இருக்கிறார்கள். மனிதர் ஒருவரில் ஒருவர் சார்ந்து வாழ்வது இயற்கையானது.

தனித்து இயங்க முடியாது. எனவே, சகலரையும் ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவம் உருவாக வேண்டும். எல்லோருக்கும் எல்லாமும் கிட்டாது, இல்லாதவன் பெறுமதி அற்றவன் இல்லை.

வாழ்க்கைச் சுழற்சி சாதாரணமானது. எதனை எவரும் முழுமையாக உணர்கின்றார்களா? அறிந்தும் அறியாதவர்கள் போல, வாழ்கின்றவர்களே அநேகமானவர்களாக இருக்கின்றார்கள். யதார்த்த உண்மையை உணர்க.

-பருத்தியூர் பாலா. வயிரவநாதன்

## கடிதங்கள்

# வடிகான்களில் வடிந்தோடும் குடிநீர்


கந்தளாய் பிராந்திய நீர் வழங்கல் அலுவலகப் பிரிவுக்குட்பட்ட முள்ளிப்பொத்தானை சதாம் வீதியில், குடிநீர் குழாய் வெடித்து கடந்த சில நாட்களாக நீர் வெளியேறிக் கொண்டிருப்பதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு குடிநீர் குழாய் உடைந்து இரவு பகலாக வடிகான்களில் நீர் வடிந்தோடிக்கொண்டிருப்பதால், ஏனைய பகுதிகளுக்கான நீரின் வேகம் குறைந்துள்ளதாகவும், மக்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இது தொடர்பாக, தம்பலாகமம் பிரதேச நீர் வழங்கல் அலுவலகத்துக்கு பொதுமக்களால் பலமுறை முறைப்பாடுகளை செய்தும், எந்த விதமான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட வில்லை.

எனவே, நீர் வீணாகுவதை கூடிய விரைவில் தடுத்து நிறுத்த வேண்டுமென அப்பகுதி மக்கள் அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

- எப்.முபாரக்



## Sun Siyam பாசிகுடாவின்

# சுதந்திர தினக் கொண்டாட்டம்

இலங்கையின் கிழக்கு கடற்கரைப் பகுதியில் சுற்றுலாவை மேம்படுத்தும் நோக்குடன், மறுசீரமைக்கப்பட்டு அண்மையில் மீண்டும் திறந்து வைக்கப்பட்ட Sun Siyam பாசிகுடா, 76ஆவது சுதந்திர தினத்தைக் கொண்டாடியது. கிழக்கு பிராந்தியத்தில் புதிய யுகத்தை ஆரம்பித்து, விருந்தினர்களுக்கு ஒப்பற்ற விருந்தோம்பல் அனுபவத்தை வழங்கும் வகையில் அமைந்துள்ளது.



சுதந்திர தினத்தை முன்னிட்டு தேசியக் கொடி ஏற்றலுக்கும், ஹோட்டலின் கொடி ஏற்றலுக்கும் ஹோட்டலில் தங்கியிருந்த விருந்தினர்களை அழைத்துப் பங்கேற்கச் செய்திருந்தது. அவ்வேளையில் தேசிய கீதமும் இசைக்கப்பட்டிருந்தது. விருந்தினர்கள் மற்றும் அணியினர் தேநீர் விருந்துபசாரத்தில் பங்கேற்றிருந்ததுடன், இதர விருந்தினர்களுடன் உள்ளக உணவு வகைகளை அருந்தி மகிழ்ந்திருந்தது.

Studio Sixty7 உடன் கைகோர்த்து Sun Siyam பாசிகுடா மறுசீரமைப்பு செயற்பாடுகளைத் தொடர்ந்து, 2023 நவம்பர் 17ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இலங்கையில் கலாசார செழுமையை மேம்படுத்தி ஒப்பற்ற சொகுசை வழங்கும் வகையில் இது அமைந்துள்ளது.

2023 ஆம் ஆண்டில் 1.48 மில்லியன் சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்திருந்ததுடன், இந்த ஆண்டின் ஜனவரி மாதத்தில் 200,000 சுற்றுலாப் பயணிகள் சமூகமளித்திருந்ததாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை (SLTDA) அறிவித்துள்ளது. கிழக்கு பிராந்தியம் இதில் முக்கிய பங்காற்றியிருந்ததுடன், விருந்தினர்களுக்கு இலங்கையின் இரம்மியமான பகுதிகளையும், ஒப்பற்ற கரைகள், பரந்தளவு உணவு, ஆலயங்கள், வனஜீவராசிகள் மற்றும் கலாசார அம்சங்களைக் காணக்கூடியதாக இருந்தது.

Sun Siyam பாசிகுடா பொது முகாமையாளர் அர்ஷெத் ரெஃபாய் கருத்துத் தெரிவிக்கையில், "நாம் இலங்கையின் 76ஆவது சுதந்திர தினத்தை கொண்டாடும் நிலையில், Sun Siyam பாசிகுடா பிராந்தியத்தின் மீட்சிக்கும், விருந்தினர்கள் மற்றும் சமூகத்தாரின் நலனிலும் அர்ப்பணிப்பை வெளிப்படுத்தும் அடையாளமாக அமைந்துள்ளோம். எமது விருந்தினர்களுக்கு சிறந்த அனுபவத்தை வழங்குவது மாத்திரமன்றி, இப்பிரதேசங்களைச் சேர்ந்த வசிப்போருக்கும் தொழில் வாய்ப்புகளை வழங்குவதுடன், பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிப்பு வழங்குகின்றோம். இலங்கையின் சுற்றுலா மீட்சியில் அங்கம் பெறுவதற்கு சிறந்த தருணமாக அமைந்திருப்பதுடன், தேசத்தின் சமூக மற்றும் பொருளாதார நலனை மேம்படுத்துவதில் பங்களிப்பு வழங்குவதையிட்டும் மகிழ்ச்சியடைகின்றோம்" என்றார்.

Sun Siyam பாசிகுடாவில் 34 இடவசதிகள் நிறைந்த நவீன ஒன்று, இரண்டு படுக்கையறைகளைக் கொண்ட பெவிலியன்கள் ஜோடிகள், குடும்பங்கள் மற்றும் நண்பர்கள் குழுவுக்குச் சிறந்த கரையோர அனுபவத்தை வழங்குகின்றது. ரிசோர்ட்டின் மாற்றியமைப்பில் செழுமையான உள்ளக பகுதிகள் அடங்கியிருப்பதுடன், பிரத்தியேகமான உள்ளம்சம், ஒப்பற்ற மற்றும் சிறந்த சூழலை வழங்குவதாக அமைந்துள்ளது.

ரிசோர்ட்டினால் விருந்தினர்களுக்கு ஒப்பற்ற உணவுசார் சிறப்பம்சங்கள் வழங்கப்படுவதுடன், இலங்கையின் ஒப்பற்ற தெரிவுகள் மற்றும் பாரம்பரிய அம்சங்களையும் வழங்கப்படுகின்றது. குறிப்பிடத்தக்க தெரிவுகளில், இலங்கையின் கிழக்கு கரையோர பகுதியில் காணப்படும் மாபெரும் வைன் விற்பனையகமான The Cellar அடங்கியிருப்பதுடன், சுவை நிறைந்த தேநீர் அனுபவத்தை வழங்குவதற்கு Tea House அமைந்துள்ளது.

Slice & Grill கரையோர கொள்கைசார் அலங்கார வடிவமைப்பினைக் கொண்டுள்ளதுடன், Beach Shack இனால் கரீபியன் அனுபவம் சேர்க்கப்படுகின்றது.

இலங்கையின் அதிசயங்களை கண்டு களிப்பதற்கு Sun Siyam பாசிகுடா வாய்ப்பளிப்பதுடன், குடாப் பகுதியில் snorkeling, scuba diving, jet-skiing, kayaking மற்றும் tube rides ஆகிய அனுபவங்களைப் பெற வாய்ப்பளிக்கின்றது. மேலும், ஒப்பற்ற சந்திப்பு மற்றும் நிகழ்வுக்கான வசதிகளை ரிசோர்ட் வழங்குவதுடன், பிரத்தியேகமான கரையோர திருமணங்கள், பாரம்பரிய வைபவங்கள் மற்றும் சொகுசான திருமண அழைப்புகள் ஆகியவற்றை மேற்கொள்ள வாய்ப்பளிக்கின்றது.

## கொமர்ஷல் வங்கி

# 'கோல்ட்நெட்' 16 வருடப் பூர்த்தி

"கோல்ட்நெட்" தற்போது ஆறு உள்நாட்டு வங்கிகள், நிதி நிறுவனங்கள் மற்றும் நாட்டின் இரண்டு தொலைத்தொடர்பு சேவை வழங்குநர்களுக்கு சேவையினை வழங்கும் வங்கியின் கொடுப்பனவு அட்டை சேவை தளமான ComBank Goldnet அமைப்பின் 16 வருட செயற்பாடுகளை கொமர்ஷல் வங்கி சமீபத்தில் கொண்டாடியது.

கோல்ட்நெட் உறுப்பினர்களுக்காக வங்கியால் ஏற்பாடு செய்யப்பட்ட கொமர்ஷல் வங்கி கோல்ட்நெட் சிம்போசியம் 2024, பணம் செலுத்தும் அட்டைகளின் சுற்றுச்சூழல் அமைப்பு தொடர்பான தலைப்புகளில் தொடர்ச்சியான தொழில்நுட்ப விளக்கக்காட்சிகள் மற்றும் கோல்ட்நெட் உறுப்பினர்களுக்கு அவர்களின் உறுதியான மற்றும் தொடர்ச்சியான கூட்டாண்மையை அங்கீகரிக்கும் வகையில் பாராட்டு டோக்கன்களை வழங்குதல் ஆகியவற்றை உள்ளடக்கியது. மற்றும் கொமர்ஷல் வங்கியுடனான அவர்களின் அசைக்க முடியாத மற்றும் தொடர்ச்சியான கூட்டாண்மை மற்றும் இலங்கையில் டிஜிட்டல் கொடுப்பனவுகளை ஊக்குவிப்பதில் அவர்களின் பங்களிப்பை அங்கீகரிக்கும் வகையில் அமைந்துள்ளது.



கோல்ட்நெட் சிம்போசியம் 2024 இன் மாலை அமர்வில் பேசிய கொமர்ஷல் வங்கியின் பிரதம செயற்பாட்டு அதிகாரி எஸ். பிரபாகர், 'இலங்கையில் டிஜிட்டல் வங்கியின் முன்னோடியாகவும், 103 வருட பாரம்பரியத்தைக் கொண்ட நாட்டின் மிகப்பெரிய தனியார் வங்கியாகவும். டிஜிட்டல் துறையில் சுமூகமான பரிவர்த்தனைகளை எளிதாக்குவது எங்கள் கடமையாகும், எந்த நிதி நிறுவனம் அதை நடத்தினாலும், வாடிக்கையாளர்கள் பயனர் நட்பு சேவையின் பலனைப் பெறுவதை உறுதிசெய்கிறது.' என்றார்.

கொமர்ஷல் வங்கியின் கோல்ட்நெட் அமைப்பு, அட்டை வழங்கல், அட்டைத் தனிப்பயனாக்கம், ATM சேவைகள் மற்றும் அட்டையின்றி பணத்தை பெற்றுக் கொள்வது போன்ற கட்டண அட்டைகள் தொடர்பான சேவைகளை Dialog, SLT Mobitel, Amana Bank, Central Finance, Senkadagala Finance, Sanasa Development Bank, Citizens Development Bank மற்றும் LOLC போன்ற நிறுவனங்களுக்கு தற்போது வழங்குகின்றது.

கொமர்ஷல் வங்கி இலங்கையில் டிஜிட்டல் வங்கிச் சேவையில் முன்னணியில் உள்ளது, அதன் முதன்மையான டிஜிட்டல் வங்கிப் பயன்பாடான ComBank Digital நாட்டில் அதிகம் பயன்படுத்தப்படும் டிஜிட்டல் வங்கிச் செயலியாகவும், வங்கியின் டிஜிட்டல் கட்டணப் பயன்பாடான Q+ ஆனது டிஜிட்டல் கொடுப்பனவுத் துறையில் சந்தைத் முன்னோடியாகவும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.



## உலகை மிரட்டவிருக்கும்

# 2024 எல் - நினோ தாக்கம்

### விஞ்ஞானிகள் எச்சரிக்கை



ஏ. எம்.அஜாத்கான்
BA (Hons) Special in Geography (R), SEUSL

வானிலை ஆய்வாளர்கள், சூழலியல் ஆர்வலர்கள், விஞ்ஞானிகள், உலக நாடுகள் மற்றும் சுற்றுச்சூழல் அமைப்புகள் போன்றவற்றினதும், உலக அளவில் அனைவரினதும் பேசுபொருள் எல் - நினோ (El - Nino) என்ற காலநிலை தோற்றப்பாடுதான்.

பிறந்திருக்கும் 2024, புது வருடமானது பல்வேறு இயற்கை பேரிடர்கள் மற்றும் அதிகரித்த காலநிலை மாற்றங்களினால் உலகளவில் பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்தும் வருடமாக அமையும் என விஞ்ஞானிகளால் எதிர்வு கூறப்பட்டுள்ளது.

எல் - நினோ, வளிமண்டல சுழற்சியில் ஏற்படும் வெப்பம், காற்றின் மாறுதல்கள் மற்றும் அதனால் ஏற்படும் விளைவுகளால் உலக நாடுகளில் உள்ள சில பகுதிகளில் பாதிப்புகளை உண்டாக்கும் ஓர் நிகழ்வு ஆகும்.

இவ் எல்- நினோ நிகழ்வால் உலகம் முழுவதும் பரவலாக கடுமையான விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என்று அமெரிக்கத் தேசிய கடல்சார் மற்றும் வானிலை ஆராய்ச்சி அமைப்பான National Oceanic and Atmospheric Administration (NOAA) தெரிவித்துள்ளது. பொதுவாகக் குறிப்பிட வேண்டும் என்றால் அதீத மழை, திடீர் புயல், மிதமிஞ்சிய வறட்சி போன்ற பாதிப்புகள் அதிகளவில் ஏற்படலாம்.

### எல்– நினோ என்றால் என்ன?

எல்- நினோ (El - NINO) என்பது உலகம் முழுவதும் பரவலாக பல்வேறு பகுதிகளிலும் வெப்பநிலையை உயரச் செய்யும் ஒரு வகை காலநிலை நிகழ்வு ஆகும். பசிபிக் கடற்பரப்பில் ஏற்படும் வெப்பநிலை அதிகரிப்புதான் எல்- நினோ என்று குறிப்பிடப்படுகின்றது.

பசிபிக் கடற்பரப்பு வெப்ப நிலையானது ஒரு குறிப்பிட்ட காலப்பகுதிக்குள், அதாவது 7 முதல் 24 மாதங்கள் வரை அதிகமாக்கும் நிகழ்வாகும். அதாவது பசிபிக் சமுத்திரத்தில் பேரு, ஈக்குவடார் கரையோரத்தினை சுற்றியுள்ள கடல் நீரின் வெப்பநிலையானது திடீரென அதிகரித்துச் செல்வதால் வளியமுக்கம் மற்றும் காற்று கோளங்களிலும் மாற்றங்கள் ஏற்படுகின்றன. இவை மூன்று விதமான செயற்பாடுகளை உருவாக்குகின்றது வறட்சி, வெள்ளப்பெருக்கு, கனத்த குளிர்காற்று. இவ்வாறு ஏற்படுத்தப்படுகின்ற தோற்றப்பாடே எல் - நினோ தோற்றப்பாடு எனப்படுகிறது. இவ் எல் - நினோவின் தாக்கம் காரணமாக ஒரு பகுதியில் வறட்சியும் இன்னொரு பகுதியில் அதிக மழைவீழ்ச்சி கிடைப்பதன் காரணமாக வெள்ளப்பெருக்கினையும் ஏற்படுத்துகின்றது.

இந்நிலையில், உலகத்தின் கவனம் முழுவதும் இக் காலநிலை தோற்றப்பாட்டின் மீது திசை திரும்பியுள்ளது. 2024ஆம் ஆண்டினை பொறுத்தவரையில் மே மாதம் வரை எல் - நினோ ஆண்டாக இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. வெப்பநிலையானது 2023ஆம் ஆண்டை காட்டிலும் இன்னும் அதிகமாக இருக்கும் என்று விஞ்ஞானிகள் எதிர்வு கூறுகின்றனர். இந்நிலையில், பசிபிக் பெருங்கடலின் வெப்பம் கிழக்கு நோக்கி நகர்ந்து கொண்டிருப்பதனால் காற்றின் திசை மாற்றம், பெருங்கடல் வெப்பச்சலனம், மழைப்பொழிவு ஆகியவை பூமியில் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடும் என பெருங்கடல் ஆய்வில் ஈடுபட்டுள்ள டாக்டர் உல்லா ஹீடி குறிப்பிட்டுள்ளார்.

இந்தப் பருவநிலை மாற்றங்கள் விவசாயத்துறையையும் பாதிக்கக்கூடும், கிழக்கு ஆசியா, தெற்கு ஆப்பிரிக்கா கண்டம், மத்திய அமெரிக்கா போன்ற பகுதிகளில் காணப்படும் வறட்சியால்; 2024 ஆம் ஆண்டில் உணவுப் பாதுகாப்பின்மை ஏற்படலாம் என்று ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் வேளாண் அமைப்பு கவலை வெளியிட்டுள்ளது.

தற்போதைய செய்திகளின்படி, எல் - நினோ பருவநிலை மாற்றம் அமேசான் காட்டுப்பகுதி மற்றும் நதியில் வறட்சியான நிலைமையை ஏற்படுத்தியுள்ளது. அது தெற்கு, கிழக்கு பிரேசிலும் அண்டை நாடான உருகுவேயிலும் அதிக மழைப்பொழிவைக் கொண்டு வரலாம் என அமெரிக்கத் தேசிய பெருங்கடல் மற்றும் வளிமண்டல அமைப்பின் மூத்த விஞ்ஞானி, டாக்டர் மைக்கல் மெக் பெடன் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் 2024ஆம் ஆண்டு மார்ச் மற்றும் மே மாதங்களுக்கு இடையில் ஒரு சூப்பர் எல் - நினோ உலகத்தைத் தாக்கும் என்பதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. அமெரிக்காவின் தேசிய பெருங்கடல் மற்றும் வளிமண்டல அமைப்பின் கணிப்பின்படி, சூப்பர் எல் - நினோ ஏற்பட வாய்ப்பு அதிகம் இருப்பதாகக் கூறப்பட்டுள்ளது.

### SH தேசிய பெருங்கடல் மற்றும் வளிமண்டல அமைப்பு (NOAA) வின் கணிப்பு

மார்ச் முதல் மே மாதம் வரை கோடைகாலம் நிலவுகிறது. இக்காலகட்டத்தில்தான் எல் - நினோ உச்சத்தை அடைய வாய்ப்பு உள்ளது.

NOAA வின் முன்னறிவிப்பின் படி, Super El - Nino (சூப்பர் எல் - நினோ), மார்ச் மற்றும் மே 2024 இற்கு இடையில் ஏற்படலாம். கடுமையான எல் - நினோ ஏற்படுவதற்கான வாய்ப்பு 70% முதல் 75 % சதவீதம் என மதிப்பிடப்பட்டுள்ளது.

பூமத்திய ரேகைக்கு அருகில் உள்ள கடல் மேற்பரப்பு வெப்பநிலை எல் - நினோ காலத்தில் சராசரியை விட 1.5°C டிகிரி செல்சியஸ் உயரும். 1972 - 1973, 1982 - 1983, 1997 - 1998 மற்றும் 2015 - 2016ஆம் ஆண்டுகளில் பல நாடுகளில் கடுமையான வெப்பம், வறட்சி மற்றும் வெள்ளம் போன்ற நிலைமைகளை சந்தித்தன. 2024ஆம் ஆண்டிலும் அத்தகைய நிலைமை ஏற்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

### சூப்பர் எல் – நினோ (Super El – Nino) என்றால் என்ன?

பசிபிக் பெருங்கடலின் மேற்பரப்பு வெப்பநிலை பொதுவாக 26°C டிகிரி செல்சியஸ் முதல் 27°C டிகிரி செல்சியஸ் வரை இருக்கும் சாதாரண வரம்பான 32°C டிகிரி முதல் 34°C டிகிரி செல்சியஸை விட வெப்பநிலை அதிகமாககாணப்பட்டு இருந்தால் அது சூப்பர் எல் - நினோ (Super El - ino) எனப்படும்.

### இலங்கையில் எல்–நினோவின் தாக்கம் எவ்வாறு காணப்படும்?

2024ஆம் ஆண்டு வெப்பமான ஆண்டாக உலக விஞ்ஞானிகள் கணித்துள்ள நிலையில் எல்-நினோ காரணமாக இலங்கையின் பெரும் போக பயிர்ச்செய்கை பருவம் வறட்சியினால் மோசமாக பாதிக்கப்படும் என எதிர்பார்க்கப் படுகிறது.

இந்நிலையில், இலங்கை வளிமண்டலவியல் திணைக்களத்தின் 2024 ஜனவரி மாதத்தில் இருந்து மார்ச் மாதம் வரையான பருவ காலத்திற்கான முன்னறிவிப்பு அறிக்கையின்படி, தெற்கு ஆசியாவின் காலநிலை மீது செல்வாக்கு செலுத்தும் பூகோள காலநிலை மற்றும் உலகளாவிய ரீதியான பல்வேறு காலநிலை மாதிரிகளின் அடிப்படையில் இலங்கையில் எல்-நினோ நிலைமை வட அரைக்கோள இளவேனிற் காலத்தில் அதாவது 2024 ஏப்ரல் தொடக்கம் ஜூன் மாதம் வரை 62% சதவீத வாய்ப்புடன் தொடரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அத்துடன், பூகோளக் காலநிலையின் தாக்கமானது எல்லா விதமான இயற்கை நிகழ்வுகளிலும் செல்வாக்கு செலுத்தி வருகின்றது. பேரிடர்களுக்கான தயார்நிலை, அனர்த்தங்களை எவ்வாறு எதிர்கொள்வது என்பதற்கான திட்டங்களோடு காலநிலை மாற்றத்தை கட்டுப்படுத்துவதிலும் உலக நாடுகள் முனைப்பு காட்ட வேண்டும், இல்லாவிட்டால் இவ் எல்-நினோ போன்ற பல காலநிலை நிகழ்வுகள் மற்றும் தோற்றப்பாடுகளும் எதிர்காலத்தில் இதைவிட பயங்கரமான இயற்கை பேரழிவுகளையும் இவ்வுலகம் சந்திக்க நேரிடலாம், எனவே, உலக மக்கள் மற்றும் சர்வதேச அரசாங்கங்கள் மற்றும் மனித சமூகம் இணைந்து காலநிலை மாற்றத்தை குறைப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடுதல் காலத்தின் கட்டாயமாக உள்ளது.



# IORA தினம் 2024

வெளிவிவகார அமைச்சு மற்றும் கல்வி அமைச்சு ஆகியன இணைந்து பாடசாலை மாணவர்களுக்காக IORA தினம் 2024 நிகழ்வை மார்ச் மாதம் ஏற்பாடு செய்துள்ளன. இதில், இந்து சமுத்திரத்தின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில் மாணவர்களுக்கான ஓவியப் போட்டி உள்ளடங்கியிருக்கும்.

2023/2025 காலப்பகுதிக்கான, இந்து சமுத்திர ரிம் சம்மேளனத்தின் (IORA) தலைமைத்துவப் பொறுப்பை 2023 ஒக்டோபர் மாதம் இலங்கை ஏற்றிருந்தது. IORAஇல் 23 அங்கத்துவ நாடுகளும், பதினொரு கலந்துரையாடல் பங்காளர்களும் அடங்கியுள்ளன.

IORA தினத்துக்கான தொனிப்பொருள் 'எதிர்கால தலைமுறையினருக்கு நிலைபேறான இந்து சமுத்திரம்" என்பதாக அமைந்திருப்பதுடன், எதிர்காலத் தலைமுறையினருக்கு சமுத்திர பாதுகாப்பு மற்றும் நிலைபேறான செயன்முறைகள் போன்றவற்றின் முக்கியத்துவம் தொடர்பில் விழிப்புணர்வூட்டும் ஈடுபாட்டு செயற்பாடுகளில் அதிகளவு கவனம் செலுத்தும்.

திட்டமிடப்பட்ட செயற்பாடுகளில், கல்வி அமைச்சும் விஜய பத்திரிகை ஸ்தாபனமும் இணைந்து மாணவர்களுக்கான தேசிய மட்ட ஓவியப் போட்டியை நடத்துகிறது.

பாடசாலை மாணவர்களிடமிருந்து மூன்று பிரிவுகளில் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.
ஆரம்ப நிலை (தரம் 1 – 5),
கனிஷ்ட நிலை (தரம் 6 – 9),
சிரேஷ்ட நிலை (தரம் 10 – 13).
விஜய பத்திரிகை ஸ்தாபனத்தின் சிறுவர் பிரசுரங்கள் மற்றும் ஒன்லைன் தளங்களில் மேலதிக தகவல்கள் வெளியாகும்.

சமுத்திர நிலைபேறாண்மையின் முக்கியத்துவம் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், நாடளாவிய ரீதியில் சிறுவர்களின் பங்கேற்புடன் பல்வேறு சமுத்திரம் சார்ந்த செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும். இலங்கை கடற்படை மற்றும் இதர சமுத்திரசார் முகவர் அமைப்புகளின் ஒழுங்கமைப்பில் இந்த செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும். மாணவர்களுக்கான குறுகிய காலப்பகுதி கடல் விஜயங்களுக்கான வாய்ப்புகளும் வழங்கப்படும்.

IORA தினத்துக்கு முன்னதாக பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும் திட்டமிடப்பட்டுள்ளன.

IORA தினம் 2024இன் பிரதான நிகழ்வு கொழும்பில் கடல் முகப்புப் பகுதியில் மார்ச் 10ஆம் திகதி முன்னெடுக்கப்படும் என்பதுடன், சமுத்திரத்துடன் தொடர்புடைய செயற்பாடுகளை விளக்கும் காட்சிகூடங்களையும் கொண்டிருக்கும்.

# IORA தின ஓவியப் போட்டி 2024




## "எதிர்கால சந்ததியினர்களுக்காக நிலையான இந்து சமுத்திரம்"

- இலங்கை, இந்து சமுத்திரத்தை அண்மித்த நாடுகளின் அமைப்பான, IORA அமைப்பின் தலைமைத்துவத்தை தற்போது வகிப்பதுடன், 2024ஆம் ஆண்டிற்கான IORA தினத்தை 2024 மார்ச் மாதம் 10ஆம் திகதி கொழும்பில் நடத்துவதற்கு திட்டமிட்டுள்ளது.
- இது தொடர்பான நடவடிக்கைகளின் ஒருபகுதியாக, கல்வி அமைச்சு மற்றும் விஜய பத்திரிகை என்பவற்றுடன் இணைந்து "எதிர்கால சந்ததியினர்களுக்காக நிலைபேறான இந்து சமுத்திரம்" என்ற தொனிப்பொருளின் கீழ், பல்வேறு தலைப்புகளில் பாடசாலை மாணவர்களிடையே நாடளாவிய ரீதியில் ஓவியப்போட்டி ஒன்றை நடாத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## நாடளாவிய ரீதியில் வளர்ந்து வரும் அனைத்து கலைஞர்களையும் அழைக்கிறோம் !

நமது அழகிய இந்து சமுத்திரத்தைப் பாதுகாப்பதை மையமாகக் கொண்டு தமது படைப்பாற்றலையும் ஆர்வத்தையும் வெளிப்படுத்துமாறு நாட்டிலுள்ள அனைத்து பாடசாலை மாணவ, மாணவியரை அன்புடன் அழைக்கிறோம்!





## பங்கேற்பு

பங்கேற்பதற்கான முறைகள் பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன:



**ஆரம்பபிரிவு (1–5 தரங்கள்)**
தலைப்பு : "எமது சமுத்திரம் - எமது வாழ்க்கை"
(பங்கேற்பதற்கான சான்றிதழ்கள் / பரிசுகள் வழங்கப்படும்)



**கனிஷ்ட பிரிவு (6–9 தரங்கள்)**
தலைப்பு : "நமது சமுத்திரத்தை பாதுகாப்போம்"
(பங்கேற்பதற்கான சான்றிதழ்கள் / பரிசுகள் வழங்கப்படும்)



**சிரேஷ்ட பிரிவு (10–13 தரங்கள்)**
தலைப்பு : "எதிர்கால சந்ததியினருக்காக நிலையான இந்து சமுத்திரம்"
(பங்கேற்பதற்கான சான்றிதழ்கள் / பரிசுகள் வழங்கப்படும்)



**வெற்றி பெறும் மற்றும் தேர்ந்தெடுக்கப்படும் கலைப்படைப்புக்கள் 2024 மார்ச் 10 திகதி கொழும்பில் நடாத்தப்படும் IORA கலைகண்காட்சியில் காட்சிப்படுத்தப்படும்.**



**அதிக பார்வையாளர்கள் மத்தியில் உங்களுடையத திறமைகளை வெளிப்படுத்தி உங்கள் செய்தியைப் பரப்புங்கள்.**



**உங்கள் கலைப்படைப்புக்கள் மூலம் நிலைப்பேறானத் தன்மைக்காக குரல் கொடுப்பவராகுங்கள், நேர்மையான மாற்றத்தை ஏற்படுத்துங்கள்**



## நிபந்தனைகள்

- இலங்கையிலுள்ள அனைத்து பாடசாலை மாணவர்களும் பங்குற்றலாம்
- A3 அளவான காகிதம் பயன்படுத்தப்பட வேண்டும்
- அனைத்து ஆக்கங்களும் பாடசாலை அதிபரால் சான்றளிக்கப்பட்டு கீழே தரப்பட்டுள்ள விண்ணப்பப் படிவமொன்றுடன் இணைத்து அனுப்பப்பட வேண்டும்.

## ஆக்கங்ளை ஒப்படைத்தல்

உங்கள் கலைப்படைப்புக்களை பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்துடன் 2024 பெப்ரவரி 16ஆம் திகதிக்கு முன்னதாக கிடைக்கக்கூடிய வகையில் கீழே உள்ள முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்கவும்.
**பணிப்பாளர் (அழகியற்கல்வி) கல்வி அமைச்சு**

**இசுருபாய, பெலவத்தை பத்தரமுல்ல**
தபால் உறையின் இடது பக்கத்தில் மேல் மூலையில் பின்வரும் விபரங்களை குறிப்பிடவும்

**IORA தின ஓவியப் போட்டி 2024**
பிரிவு :...........................................
மாகாணம் :.....................................

தெரிவு செய்யப்பட்ட கலைப்படைப்புகள் உள்நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் நடாத்தப்படும் எதிர்கால நிகழ்ச்சிகளுக்கும் பயன்படுத்தப்படும். வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு, கல்வி அமைச்சு மற்றும் விஜய பத்திரிகை என்பவற்றால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## IORA தின ஓவியப் போட்டி 2024 விண்ணப்பப்படிவம்

**முழுப் பெயர்** :...........................................................

**பிரிவு** : ஆரம்ப (1-5 தரங்கள்) ☐ கனிஷ்ட (6-9 தரங்கள்) ☐ சிரேஷ்ட (10-13 தரங்கள்) ☐

**பாடசாலை** :...........................................................

**மாகாணம்** :...........................................................

**வீட்டு முகவரி** :...........................................................

**பெற்றோர் / பாதுகாவலரின் பெயர்** :...........................................................

**பெற்றோர் / பாதுகாவலரின் தொலைபேசி இலக்கம்** :...........................................................

**அதிபரின் சான்றிதழ் :**

மேற்படி மாணவர் இந்த பாடசாலையில் ........................... தரத்தில் கல்வி பயின்று வருகிறார் என சான்றளிக்கிறேன்.

...............................................
அதிபரின் கையொப்பம்






# முற்றவெளியில்...

யாழ்ப்பாணம் முற்றவெளியில் வெள்ளிக்கிழமை (09) இரவு இடம்பெற்ற பாடகர் ஹரிஹரனின் இசைநிகழ்ச்சி, குழப்பத்தில் நிறைவடைந்தது. குழப்பதற்கு பின்னரான காட்சிகள்.

– எம்.றொசாந்தன்























# புத்தகப் பொதிகள் வழங்கும் நிகழ்வு

மினுவாங்கொடை பிரதேசத்திலுள்ள குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த பாடசாலை மாணவர்கள் 1,200 பேருக்கு புத்தகப் பொதிகள் வழங்கும் நிகழ்வ உடுகம்பல வாராந்த சந்தையில் வெள்ளிக்கிழமை (09) இடம்பெற்றது. அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் ஆலோசனைக்கமைய, மினுவாங்கொடை பிரதேச சபையினால் இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.





# 16ஆவது பட்டமளிப்பு விழா





இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் 16ஆவது பட்டமளிப்பு விழா சனிக்கிழமை (10) ஆரம்பமாகியது. இந்நிகழ்வு உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கரின் நெறிப்படுத்தலில், பல்கலைக்கழக வேந்தர் ஜனாதிபதி சட்டத்தரணி கலாநிதி பாயிஸ் முஸ்தபா தலைமையில் பல்கலைக்கழக ஒலுவில் வளாகத்தில் மிக கோலாகலமாக இடம்பெற்றது.

– எம்.எப்.றிபாஸ் , நூருல் ஹுதா உமர்







# செந்தில் தலைமையில், அறிவுறுத்தல் கூட்டம்

மட்டக்களப்பு-மண்முனை தென்மேற்கு பட்டிப்பளை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பகுதியில் காணப்படும் இரால் பண்ணைகளை அமைப்பதற்காக தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கான அறிவுறுத்தும் கூட்டம் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் தலைமையில் பட்டிப்பளை பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன்போது, கிராமங்களில் உள்ள மக்களை வலுப்படுத்த வேண்டும் என்று அதற்கு தேவையான வேலை திட்டங்களை முன்னெடுக்க ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கூறியதன் அடிப்படையில், கிழக்கு மாகாணத்தில் கிராமிய ரீதியான செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளதாக கிழக்கு மாகாண ஆளுனர் செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

– வா.கிருஸ்ணா





# சோழன் உலக சாதனைக்கு முயற்சி

நோர்வூட்-போற்றி தோட்டத்தைச் சேர்ந்த வ.வாசிகன் என்ற இளைஞன் நுவரெலியா தொடக்கம் நோர்வூட் வரையிலான 53 கிலோ மீட்டர் தூரத்தை, 5 கிலோ கிராம் பாரத்தை இரு கைகளிலும் ஏந்தியவாறு 4 மணித்தியாலம் 30 வினாடிகளில் சென்று உலக சாதனை புத்தகத்தில் இடம் பிடிப்பதற்கான முயற்சியினை சனிக்கிழமை (10) மேற்கொண்டார்.

அந்தவகையில், நுவரெலியாவில் காலை 7 மணியளவில் தனது நடைப் பயணத்தை ஆரம்பித்த வாசிகனுக்கு நோர்வூட் நகரை வந்தடைய 6 மணித்தியாலங்கள் சென்றமையால் உலக சாதனை புத்தகத்தில் இடம்பிடிப்பதற்கான வாய்ப்பு கிட்டவில்லை. இருந்த போதிலும், குறித்த இளைஞனுக்கு சோழன் உலக சாதனை புத்தக நிறுவனம் பதக்கத்தையும் சின்னத்தையும் வழங்கி பாராட்டியது.

இந்நிகழ்வில், சோழன் உலக சாதனை புத்தகத்தின் இலங்கைக்கான கிளை தலைவர் ஸ்ரீ நாகவானி ராஜா, சோழன் உலக சாதனை புத்தகத்தின் நுவரெலியா மாவட்ட தலைவர் எஸ்.சதீஸ்குமார் பிரதேசசபை உறுப்பினர்கள் வர்த்தக சங்க உறுப்பினர்கள் பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

– எஸ். சதீஸ்குமார்

இஸ்லாமாபாத்

பாகிஸ்தான் தேர்தலில் வெற்றிபெற்ற

# 3 சுயேச்சைகள் நவாஸுக்கு ஆதரவு

பாகிஸ்தானில் கடந்த 8ஆம் திகதி பாராளுமன்ற தேர்தல் நடந்து முடிந்த நிலையில், வாக்கு எண்ணிக்கை உடனடியாக ஆரம்பித்தபோதும், முடிவுகளை அறிவிப்பதில் தாமதம் ஏற்பட்டது. இது அரசியல் கட்சிகளின் விமர்சனங்களுக்கும், போராட்டத்துக்கும் வழிவகுத்தது.

அதன் எதிரெலியாக தேர்தல் ஆணையம் முடிவுகளை வேகமாக அறிவிக்க ஆரம்பித்தது. இருந்தபோதிலும், வாக்கு எண்ணிக்கை 2ஆவது நாளாக நேற்றும் தொடர்ந்தது.

255 இடங்களுக்கு முடிவுகள் அறிவிக்கப்பட்ட நிலையில், முன்னாள் பிரதமர் இம்ரான் கானின் பாகிஸ்தான்-தெஹ்ரீப்-இ-இன்சாப் (பிடிஐ) கட்சியின் ஆதரவு பெற்ற சுயேச்சை வேட்பாளர்கள் 101 இடங்களை பெற்று முதலிடத்தில் உள்ளனர்.

அதனை தொடர்ந்து, முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப்பின் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் (நவாஸ்) கட்சி



73 இடங்களிலும், பிலாவல் பூட்டோவின் கட்சியான பாகிஸ்தான் மக்கள் கட்சி 54 இடங்களிலும் வெற்றிபெற்று அடுத்தடுத்த இடங்களில் உள்ளன. 27 இடங்களில் பிற சிறிய கட்சிகள் வெற்றிப் பெற்றன.

ஆட்சி அமைப்பதற்கு 133 இடங்கள் தேவை என்கிற நிலையில், தற்போதைய சூழலில் எந்த கட்சியும் அதற்கான பெரும்பான்மையை பெறவில்லை. இதனால் அடுத்த ஆட்சியை அமைக்கப்போவது யார் என்பதில் தொடர்ந்து இழுபறி நீடித்து வருகிறது. இதனிடையே 3 முறை பிரதமராக இருந்த நவாஸ் ஷெரீப், அனைத்து கட்சிகளையும் உள்ளடக்கிய ஒற்றுமை அரசை அமைக்க அரசியல் கட்சிகளுக்கு அழைப்பு விடுத்துள்ளார். மேலும், கூட்டணி அரசை அமைப்பதற்கான ஆலோசானைகளை தொடங்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். அதன்படி, கூட்டணி தொடர்பாக பாகிஸ்தான் முஸ்லிம் லீக் (நவாஸ்) மற்றும் பாகிஸ்தான் மக்கள் கட்சியின் நிர்வாகிகள் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவித்தன.

இந்நிலையில், தேர்தலில் வெற்றிபெற்ற 3 சுயேச்சை வேட்பாளர்கள் நவாஸ் ஷெரீப்பின் கட்சிக்கு ஆதரவு தெரிவித்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

பாகிஸ்தான் பொதுத் தேர்தல் முடிவுகள் அறிவிப்பதில் தொடர்ந்து தாமதம் ஏற்பட்டுள்ள நிலையில், தேசிய சட்டமன்றத்தில் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட மூன்று சுயேச்சைகள் பாகிஸ்தான் முஸ்லிம் லீக்-நவாஸில் (பி.எம்.எல்.) சேருவதற்கான முடிவை அறிவித்தன.



# ஆசியக் கிண்ணத் தொடர்: சம்பியனானது கட்டார்

ஆசிய கால்பந்தாட்டச் சம்மேளனத் தொடரில் கட்டார் சம்பியனானது.

தமது நாட்டில் நடைபெற்று வந்த இத்தொடரின் இறுதிப் போட்டியில் ஜோர்தானை எதிர்கொண்ட கட்டார் 3-1 என்ற கோல் கணக்கில் வென்றே சம்பியனானது.

கட்டார் சார்பாகப் பெறப்பட்ட மூன்று கோல்களையும் அக்ரம் அஃபிஃப் பெற்றார். ஜோர்தான் சார்பாகப் பெறப்பட்ட கோலை யஸன் அல்-நைமட் பெற்றிருந்தார்.

ஹங்கேரி

பாலியல் வன்முறையை மறைத்தவருக்கு பொதுமன்னிப்பு

## பதவி விலகினார் ஹங்கேரி ஜனாதிபதி

ஹங்கேரி நாட்டின் பழைமைவாதக் கட்சியின் ஜனாதிபதி சனிக்கிழமை (10) பதவி விலகியுள்ளார்.

குழந்தைகள் மீதான பாலியல் வன்முறைக்கு உடந்தையாக இருந்தவர் என குற்றம்சாட்டப்பட்ட நபருக்கு ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்கியமை நாட்டு மக்களிடையே அதிருப்தியை ஏற்படுத்தியது. இதனையடுத்து, போராட்டங்கள் இடம்பெற்ற நிலையில், அவர் பதவி விலகும் அறிவிப்பை சனிக்கிழமை (10) வெளியிட்டார்.

46 வயதான கட்டலின் நோவாக், 2022 முதல் ஜனாதிபதியாக பதவி வகித்து வந்தார்.

அரசு நடத்தும் குழந்தைகள் இல்லத்தில் நடந்த பாலியல் வன்முறையை மறைக்க உதவிய நபருக்கு ஜனாதிபதி அதிகாரத்தின் அடிப்படையில், ஏப்ரல் 2023இல் பொது மன்னிப்பு வழங்கியது, கடந்த ஒரு வாரமாக மக்களிடையே கோபத்தை ஏற்படுத்தியது.

குழந்தைகள் இல்லத்தில் 2004 முதல் 2016 வரை குறைந்தது 10 குழந்தைகளையாவது பாலியல் ரீதியாக துன்புறுத்திய இல்லத்தின் இயக்குநருக்கு 8 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

பாதிக்கப்பட்டவர்கள் அளித்த புகாரை வாபஸ் பெற அழுத்தம் கொடுத்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட நபருக்கு, ஜனாதிபதி மன்னிப்பு வழங்கியமை பொது மக்களுக்குத் தெரிய வந்தது.

இது குறித்து ஜனாதிபதி "கருணையின் அடிப்படையிலும் குற்றம் சாட்டப்பட்டவர் அவரை நம்பிய குழந்தைகளை துன்புறுத்தவில்லை என நம்பியதாலும் நான் அவருக்கு மன்னிப்பு வழங்கினேன். நான் தவறு செய்துள்ளேன். நான் யாரையேனும் துன்புறுத்தியிருந்தால், பாதிக்கப்பட்டவர்கள் உங்கள் பக்கம் நான் நிற்கவில்லை என கருதியிருந்தால் மன்னிப்பு கோருகிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.



## 'எடி'க்கு 116



கலிஃபோர்னியாவின் வடக்குப் பகுதியில் அமைந்துள்ள அழகிய நகரமான வில்டிஸில், ஒவ்வோர் ஆண்டும் அமெரிக்காவின் வயதான பெண்மணியான எடி சிசரேலியின் பிறந்தநாள் விழா வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டு வருகிறது.

இந்த முறை கடுமையான பனிப்பொழிவு காரணமாக மரங்கள் முறிந்து, நெடுஞ்சாலைகள் அனைத்தும் மூடியிருந்த நிலையிலும் கூட அவரது 116ஆவது பிறந்தநாளை நகர மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து கொண்டாடியுள்ளனர்.

உள்ளூர் அரங்குகளில் அல்லது முதியோர் மையங்களில் வெகு விமர்சையாக பிறந்தநாள் கொண்டாட்டங்களை நடத்துவதில் பெயர் பெற்றவர் எடி.

ஆனால், சமீப ஆண்டுகளாக அவரது பிறந்தநாளை நகர மக்கள் இணைந்து கொண்டாடுவதை வழக்கமாக்கியுள்ளனர். அவரது 116ஆவது பிறந்தநாளை கொண்டாடும் விதமாக ஊர்வலமும் நடைபெற்றுள்ளது.

கடும் பனிப்பொழிவிற்கு இடையிலும் இந்த வயதில் எடி ஊர்வலத்தில் கலந்துகொண்டார். இவருக்கு மரியாதை செய்யும் விதமாக உள்ளூர் அரசாங்க அதிகாரிகள் கௌரவப் பரிசை வழங்கினர்.

எடியின் பிறந்தநாள் ஊர்வலம் உள்ளூர் நாய்கள் படைசூழ தொடங்கியது.

அதற்குப் பின்னால் தீயணைப்பு வீரர்களும், பலூன்களும் விளக்குகளாலும் அலங்கரித்த கார்கள் வரிசையாக அணிவகுத்தன. பெரிய மீசையுடன் கூடிய உள்ளூர் இசை கலைஞர்கள் கிடார் வாசிக்க, அங்கு வசிக்கும் குழந்தைகள் கைகளில் பூக்களும் வண்ண அட்டைகளையும் ஏந்திக்கொண்டு நடந்து வந்தது விழாவிற்கு கூடுதல் அழகை சேர்த்தது.

உலகிலேயே இரண்டாவது வயதான நபர் என்ற பெருமையைப் பெற்றுள்ள எடி, 1908ஆம் ஆண்டு பெப்ரவரி ஐந்தாம் திகதி பிறந்துள்ளார்.





நீச்சல் பயிற்சி பெற்றவர்களுக்கு

## சான்றிதழ் வழங்கி வைப்பு

எச்.எம்.எம்.பர்ஸான்

"மூ கல்குடா டைவர்ஸ்" அணியில் இணைந்து அரச, அரச சார்பற்ற நிறுவனங்களில் உயிர்காப்பு நீச்சல் பயிற்சி பெற்று சித்தியடைந்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு காகித நகரில் வெள்ளிக்கிழமை (9) இடம்பெற்றது.

மூ கல்குடா டைவர்ஸின் தலைவர் கே. பௌஸ்தீனின் ஆலோசனைக்கு அமைவாக இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கிழக்கு மாகாண தொழில் திணைக்கள பிரதி ஆணையாளர் ஏ.தாஹிர் கலந்து கொண்டதுடன், ஏனைய அதிதிகளாக மட்டக்களப்பு சமுத்திர பல்கலைக்கழகத்தின் உதவிப் பணிப்பாளர் கே.பாலச்சந்திரன் உட்பட டைவர்ஸ் அணியின் உப தலைவர் கமால்தீன், பிரதித் தலைவர் றுபேஸ்கரன் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

இதில், நீச்சல் பயிற்சி பெற்ற 60 பேருக்கு சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

செயற்பட்டு மகிழ்வோம் போட்டியில்

## கிளிநொச்சி தெற்கு வலயம் பிரகாசிப்பு



நடராசா கிருஸ்ணகுமார்

வட மாகாண "செயற்பட்டு மகிழ்வோம்" போட்டியில் கிளிநொச்சி தெற்கு வலய பாடசாலைகளின் மாணவர் பிரகாசித்துள்ளனர்.

தரம் மூன்று பெண்கள் அணியில் முதலாமிடத்தை கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலய பாடசாலையும், ஆண் அணியில் இரண்டாமிடத்தை கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலய அணியும், கலவன் பிரிவில் முதலாமிடத்தை கிளிநொச்சி கனகபுரம் மகா வித்தியாலயமும் பெற்றன. தரம் நான்கு பெண்கள், ஆண்கள் அணியில் முதலாமிடத்தை கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயம் பெற்றுக் கொண்டது. கலவன் பிரிவில் இரண்டாமிடத்தை கிளிநொச்சி பரமன்கிராய் அமெரிக்கன் தமிழ்க் கலவன் பாடசாலை பெற்றது.

தரம் ஐந்து பெண்கள் அணியில் முதலாமிடத்தை கிளிநொச்சி முழங்காவில் ஆரம்ப வித்தியாலயமும் ஆண்கள் அணியில் இரண்டாமிடத்தை கிளிநொச்சி முழங்காவில் ஆரம்ப வித்தியாலயமும் பெற்றன. கலவன் பிரிவில் முதலாமிடத்தை கிளிநொச்சி கரியாலை நாகபடுவான் இல. 3 அமெரிக்கன் தமிழ்க் கலவன் பாடசாலை பெற்றது. ஒன்பது அணிகள் பங்குகொண்ட இப்போட்டியில் ஆறு அணிகள் தங்க விருதையும் மூன்று அணிகள் வெள்ளி விருதையும் பெற்றன. வட மாகாண செயற்பட்டு மகிழ்வோம் போட்டியில் முதலாம், இரண்டாமிடங்களைப் பெற்ற வலயமாக கிளிநொச்சி தெற்கு வலயம் உள்ளது.

தஞ்சாவூர்

விவசாய சங்க பிரதிநிதிகளுடன் மத்திய அமைச்சர்கள்

# இன்று பேச்சு

### தஞ்சையில் இருந்து புறப்பட்ட விவசாயிகள்

இந்தியாவின் பஞ்சாப் தலைநகர் சண்டிகரில் திங்கட்கிழமை (12) மாலை நடைபெற உள்ள விவசாய சங்க பிரதிநிதிகள் - மத்திய அமைச்சர்கள் இடையேயான பேச்சுவார்த்தையில் பங்கேற்க ஐக்கிய விவசாயிகள் சங்க தமிழக ஒருங்கிணைப்பாளர் பி.ஆர்.பாண்டியன், தஞ்சாவூரில் இருந்து புறப்பட்டுச் சென்றார்.

முன்னதாக, செய்தியாளர்களிடம் பேசிய பி.ஆர்.பாண்டியன், "விவசாயிகளின் போராட்டத்துக்கு மதிப்பளித்து பிரதமர் மோடி கேட்டுக்கொண்டதன்





அடிப்படையில், கடந்த 2021இல் நடைபெற்ற விவசாயிகளின் போராட்டம் திரும்பப் பெறப்பட்டது. அதன்படி, வேளாண் விரோத சட்டங்கள் திரும்பப் பெறப்பட்டன. அதோடு, விளைபொருட்களுக்கு இலாபகரமான குறைந்த பட்ச ஆதார விலையை நிர்ணயம் செய்வதற்கான சட்டத்தை இயற்ற மத்திய அரசு சார்பில் குழு அமைக்கப்பட்டது. விவசாயிகளின் பல்வேறு கோரிக்கைகள் தொடர்பாக, வரவு- செலவுத் திட்டத்தில் அறிவிப்பு வெளியாகும் என எதிர்பார்த்தோம். ஆனால், அறிவிப்பு எதுவும் வெளியாகவில்லை. அதோடு, இலாபகரமான குறைந்த பட்ச ஆதார விலையை நிர்ணயம் செய்வதற்கான சட்டமும் இயற்றப்படவில்லை.

இதையடுத்து, விவசாயிகளின் கோரிக்கைகளை வலியுறுத்தி வரும் 13ஆம் திகதி டெல்லியை முற்றுகையிடும் போராட்டத்துக்கு விவசாய அமைப்புகள் அழைப்பு விடுத்துள்ளன. இந்நிலையில், பஞ்சாப் தலைநகர் சண்டிகரில் திங்கட்கிழமை (12) மாலை 3 மணிக்கு விவசாய சங்கப் பிரதிநிதிகளை மத்திய அமைச்சர்கள் குழு சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தும் என பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

ஜேர்மனிய புண்டெலிஸ்கா தொடர்:

## லெவர்குசனிடம் தோற்ற மியூனிச்

ஜேர்மனியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான புண்டெலிஸ்கா தொடரில், பயேர் லெவர்குசனின் மைதானத்தில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 0-3 என்ற கோல் கணக்கில் நடப்புச் சம்பியன்களான பயேர்ண் மியூனிச் தோற்றது.

லெவர்குசன் சார்பாக ஜோசிப் ஸ்டனிசிச், அலெக்ஸ் கிரிமல்டோ, ஜெரெமி பிறிம்பொங் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

இதேவேளை அகஸ்பேர்க்கின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியை 2-2 என்ற கோல் கணக்கில் ஆர்.பி லெய்ப்ஸிக் சமப்படுத்தியது.

புண்டெலிஸ்கா புள்ளிகள் பட்டியலில் 55 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் லெவர்குசன் உள்ளது.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை 12, பெப்ரவரி 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.